3 | 1971

சுடர்
CHUDAR

கலை
இலக்கியத்
திங்கள்
இதழ்

அட்டைப்பட
கட்டுரை
—உள்ளே!

ஆடி - 1975
விலை ரூபா. 1-00


இந்தி-யா
ரா-எதிர்காலம்
ஜனநாயகம்

சுதந்திரன்
வெளியீடு

வாசகர் வாய்மொழி

சுடர் கண்டேன். வந்து நின்ற 'கலைச் செல்வி' இதழ் போன்ற பாணியைத்தான் அரசியல் நோக்குடன் வளர்க்க முயல்வதாக தெரிகிறது. அதுவே நோக்கமாயின் வளர்க!

—மூ. தியாகராச ஐயர், கொழும்பு-13.

*

வைகாசி இதழின் 'குடியரசு' ஆசிரியத் தலையங்கம் பிரமாதம்!

—கா. ரா. புகனேஸ்வரா, இடைக்காடு.

*

'சிறைச்சாலை இனிக்கும்' என்று கூறி எம்மை இனிக்க வைக்கும் சுடரே! நீ என்றும் சுடர்விட என் வாழ்த்துக்கள்!

—வி. தனா. நீராவியடி, யாழ்ப்பாணம்.

*

தமிழன் சுதந்திரதாகத்தை 'சுடர்' மூலம் அழகாக எடுத்துக்காட்டுகின்றீர்கள்!

—எஸ். எச். எம். சபீக்கா, காத்தான்குடி.

*

சுடரினைச் சுவைத்திட்டேன்-இனிப்பாயது என்னுள்ளத்தை இனித்திடச் செய்திட்டது!

—செல்வி. ராணி பெர்னாண்டோ,
களுபோவில, தெஹிவளை.

*

"சிறைச்சாலை இனிக்கும்" — தமிழனின் இன்றைய நிலையை நன்கு எடுத்து விளக்குகிறது!

—சு. ஆனந்தன் குகன், புலோலி தெற்கு,

*

காசி ஆனந்தனின் கட்டுரையை மேலும் இரண்டு பக்கம் கூடுதலாக வெளியிடுங்கள்!

—பொன்கை, சிவபாலன்.

*

'சுடர்' ஆனி இதழ் மிகவும் தரமாக இருந்தது—கலைஞர்களுக்கு ஒரு பக்கத்தை ஒதுக்குங்கள்!

—சி. க. தம்பிராசா, சுதுமலை வடக்கு.

*

வெளிவந்த மூன்று சுடர்களும் வெகுசிறப்பாக அமைந்திருந்தன!

—கே. கே. தியாகமணி, மாவனல்லை.

*

சிவகுமாரன் போன்ற உண்மையான தமிழ்த் தியாகியின் படத்தை அட்டையில் வெளியிட்டதற்கு எனது பாராட்டு! புதிய எழுத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுங்கள்!

—அ. தேவதாசன், கொழும்பு—13.

*

முத்திங்கள் சுடர் கண்டேன் முத்தமிழாய் இனிக்கிறது!

—ஒ. பொன்னுச்சாமி, யாழ்ப்பாணம்.

*

முதலிரண்டு இதழ்களிலும் வெளிவந்த சினிமா செய்திகள் மூன்றாவது இதழில் இடம் பெறாதது கண்டு பெருமகிழ்வுற்றேன்!

செல்வி. வசந்தா கனகரத்தினம், கொழும்பு—12.

*

அடுத்த சுடர் எப்போது வெளிவரும் என்கிற ஆவலைத் தூண்டுவது ஆனந்தனின் இனிக்கும் சிறைச்சாலை தான்!

—செல்வி. எஸ். சிவமணி, இறக்குவானை.

*

தொடர்ந்து வெளிவந்த சுடர் வாசித்தேன்—உள்ளத்தில் குமையும் எத்தனையோ ஆர்வங்களை தட்டியெழுப்புவதாக சுடர் அமைந்துள்ளது!

—செல்வி. ஜே. ஏ. டோசன், பதுளை.

*

'இனிக்கும் சிறைச்சாலை' வாசித்தேன். உள்ளம் உருகினேன்!

—செல்வி. க. நடராசா, கருகம்பனை.

*

அண்ணன் காசியின் 'சிறைச்சாலை இனிக்கும்' கட்டுரையின் மூன்றாவதுபகுதி மெய் சிலிர்க்க வைத்தது.

—செல்வி. ம. திலகேஸ்வரி, ஏழாலை மேற்கு.

*

சுடர் கண்டேன்—சுவைத்தேன். அடுத்த இதழ் வருவதற்கு இன்னும் ஒரு மாதம் காத்திருக்க வேண்டுமா? தாங்காது! வாராவாரம் சுடரை என் கரங்களில் தவழ விடுவீர்களா?

—செல்வி. சின்னையா சந்திரமணி,
ஒப்டன் குறூப்.

*

சுடரின் பக்கங்களைக்கூட்டி விலையையும் சற்று உயர்த்தினால் என்ன?

—மா ஜெரோம் அன்ரனி,
கடுவாலோ தலாவை.

*

பிரகாசமான சுடரின் ஒளி இரண்டையும் வாசித்தோம். சகதோழிகளையும் வாசிக்க வைத்தோம். ஆனால் எங்கள் ஊருக்கு சுடர் மிகத் தாமதமாகவே வந்து ஒளியைத் தருவதையிட்டு மனவருத்தம் அடைகின்றோம். காலம்செல்லச் செல்ல சுடரின் ஒளி பன்மடங்கு பிரகாசமடையும் என எதிர்பார்க்கின்றோம்.

—சரோ அம்பலவாணர், இந்திரா அம்பலவாணர், புஷ்பா அம்பலவாணர், கீதா அம்பலவாணர், மாலா அம்பலவாணர், பதுளை.

லெ. முருகபூபதி.

சுடர்
CHUDAR

வள்ளுவராண்டு 2006
ஆடி — ஜூலை
1975
சுடர் ஒன்று
ஒளி நான்கு

நெடுஞ்செழியனைப் பாராட்டுகிறோம்!

"தமிழகத்திலிருந்து வரும் சஞ்சிகைகள் அனைத்தும் குப்பை கூளங்கள்!"

"தமிழகத்து ஏடுகள் ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளை ஒதுக்குகின்றன!"

"ஈழத்து இலக்கிய வளர்ச்சியை தமிழக ஏடுகளே தடுக்கின்றன!"

"தமிழக ஏடுகள் இறக்குமதிசெய்யப்படுவதால்தான் உள்ளூரில் தமிழ் சஞ்சிகைகள் வளரமுடியவில்லை!"

"தமிழக ஏடுகள் தடைசெய்யப்படத்தான் வேண்டும்!"

இவ்வாறு பலமாகக் கூச்சலிட்டு, தென்னிந்திய — தமிழகத் துவேஷ விஷத்தை வெறிகொண்டு கக்கி—1970ம் ஆண்டு ஆடிக்காற்றில் அள்ளுண்டு வந்தவரும் இலக்கியம் என்றால் என்னவென்றே தெரியாதவருமான தமிழ் அமைச்சர் ஒருவரை கைக்குள்போட்டு —தமிழக ஏடுகள் இங்கு இறக்குமதியாகாமல் தடைசெய்வதற்கு நீண்ட காலமாகவே முயற்சி செய்து வந்த ஒரு கூட்டத்தினர் — இறுதியில் ஒருவாறாக தமது ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்கள்!

இந்தக் கூட்டத்தினர் தங்களை மூற்போக்கு எழுத்தாளர்கள் என்றும் அழைத்துக்கொண்டார்கள்!

தமிழக ஏடுகளை தடைசெய்துவிட்டோம் — ஒரு பெரிய சாதனையை புரிந்துவிட்டோம் இனிமேல் தான் ஈழத்தில் இலக்கியம் புத்துணர்ச்சியுடன் மலரப் போகிறது—ஈழத்து இலக்கிய சஞ்சிகைகள் தலையெடுக்கப்போகின்றன — என்று எல்லாம் பிதற்றிக்கொண்டார்கள்!

இவர்களது கிணற்றுத் தவளைப் போக்கைக் கண்டு நாங்கள் சிரித்துக்கொண்டோம்!

உள்ளூர் சஞ்சிகைகளை வளர்ப்பதற்கென 'ஒன்றியங்கள்' உருவாகின பெயரளவில்! அங்குரார்ப்பணக் கூட்டத்துடன் அவை இறந்துவிட்டன!

'முற்போக்கு எழுத்தாளர்கள்' என்று சொல்லப்பட்டவர்களின் வார்த்தையைக் கேட்டு — இதுதான் சமயமென சிங்கள அரசாங்கம் இந்திய சஞ்சிகைகளை தடைசெய்வதில் காட்டிய ஆர்வத்தில் ஆயிரத்தில் ஒரு பங்காவது உள்ளூர் சஞ்சிகை வளர்ச்சியில் காட்டவில்லை!

ஈழத்துக்கும் தமிழகத்துக்குமிடையே இருந்துவரும் கலை, இலக்கிய, கலாசார தொடர்புகளை துண்டிக்கவேண்டுமென்பதொன்றே அரசின் நோக்கம்! அதற்கு முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூறப்பட்டவர்கள் கருவியாகப் பயன்படுத்தப்பட்டார்கள்!

இந்தியத் தமிழகத்து சஞ்சிகைகளின் தடை ஈழத்து இலக்கிய சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு அணுவளவுகூட துணைசெய்யவில்லை!

இதில் ஆகப் பெரிய வேடிக்கை என்னவென்றால் — தமிழக சஞ்சிகைகள் நிறுத்தப்பட்ட பின்னர்தான் இங்கு வந்துகொண்டிருந்த பல சஞ்சிகைகளும் ஒவ்வொன்றாக இறந்துபட்டன!

தமிழக சஞ்சிகைகளின் தடை — ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அணுவளவுகூட உதவாதது மட்டுமல்ல — இலக்கியத் தாகம் கொண்ட தரமான வாசகர்களுக்கு பெரும் 'வரட்சியை'யும் இங்கு ஏற்படுத்திவிட்டிருப்பதை நாம் மறந்துவிடமுடியாது!

இவ்வளவு தூரம் குறுகிய கண்ணோட்டத்துடன் — தமிழக துவேஷ உணர்வுடன் — இங்குள்ள சில 'முற்போக்கு'கள் பிற்போக்குத்தனமாக நடந்துகொண்டபோதிலும் தமிழக தி. மு. க. அரசு மிகுந்த பெருந்தன்மையுடன் ஈழத்து இலக்கியப் படைப்புக்களுக்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் மூலம் ஆண்டுதோறும் மூவாயிரம் ரூபா பரிசளித்து ஈழத்து இலக்கியத்துறையை மேலும் கைதூக்கிவிட முன்வந்திருக்கிறது!

"இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்"

என்ற வள்ளுவன் வாக்குப்படி தமிழக அரசு மிகப்பெருந்தன்மையுடன் ஈழத்து படைப்புக்களுக்கும் பரிசளிக்க முன்வந்தமைக்காக தமிழக ஆட்சியையும் இந்த இனிப்பான செய்தியை அளித்த நாவலர் நெடுஞ்செழியனையும் பாராட்டுகிறோம்!

இனியாவது 'முற்போக்கு' பேசி—தமிழக விரோதத்தை வளர்க்கும் கம்யூனிஸ்ட் அணியைச்சேர்ந்த எழுத்தாளர்கள் தங்கள் தவறான போக்கைக் கைவிடுவார்களாக!



கோவை குறிப்புக்கள்

உணர்ச்சி

அம்பு இன்றி வேட்டைக்குச் சென்ற வேடர்களையும் கத்தியின்றிப் போராடிய வீரர்களையும் எவரும் எங்கும் பார்த்திருக்கலாம். ஆனால், உணர்ச்சியின்றி வெற்றி பெற்ற மக்களை எங்கும் எவரும் காண இயலாது.

—கி. ஆ. பெ. விசுவநாதம்.

"உங்களுக்கு 45, 50 வயது இருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் நாம் எதிர்பார்த்ததற்குமாறாக மிகவும் இளைஞராக இருக்கிறீர்கள்" — இப்படிச் சிலரது விமர்சனம்!

"நீங்கள் 18, 20 வயதுப் 'பொடியனாக' இருப்பீர்கள் என்று நினைத்தோம்—ஆனால் நீங்கள் 'பெரிய ஆளாக' இருக்கிறீர்கள்!" —இது வேறு சில இளைஞரது அபிப்பிராயம்!

"உங்கள் எழுத்திலோ தீப்பொறிபறக்கிறது; உணர்ச்சி கொப்பளிக்கிறது; ஆனால் நேரில் பார்க்கும்போதிலோ — அமைதியும், அடக்கமும் நிறைந்து சாதுபோல் காணப்படுகிறீர்கள். உங்கள் எழுத்துக்களைப் படிக்கும் நாங்கள், உங்களை நேரில் காணும்போது அவற்றையெல்லாம் எழுதியது நீங்கள் தானா என்று நம்ப முடியாமல் தவிக்கிறோம்!" — இது இன்னும் சிலரின் கருத்து!

இவையெல்லாம் என்னைப்பற்றி எனது அருமை வாசகர்கள் எனக்கு முன்னாலே அவ்வப்போது செய்த விமரிசனங்கள்!

உள்ளத்தில் ஆழமான இலட்சியப் பற்றும் சத்தியமும் தூய்மையும் இருந்தால் எழுத்தில் உணர்ச்சியும் உத்வேகமும் தானாகவே பிரதிபலிக்கும். இதைத்தான் பாரதி கூறினான்—உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் என்று!

ஓர் எழுத்தாளனின் படைப்பு உணர்ச்சி பூர்வமாக அமைவதற்கு காரணம் இவை தானே தவிர—அவனது உருவத்துக்கும் பருவத்துக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது!

●

பத்திரிகைப்பணியை ஒரு தொழில் (PROFESSION) என்று கூறுவதை நான் ஏற்றுக்கொள்ளாதவன். பத்திரிகைப் பணி என்பது பொறுப்புமிக்க ஓர் சமுதாயத் தொண்டு! கொடுக்கும் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வயிற்றுப் பிழைப்புக்காக முதலாளி சொல்வதையெல்லாம் தொழிலாளர்கள் விசுவாசத்துடன் செய்யத்தான் வேண்டும்! ஆனால் ஒரு பத்திரிகை ஆசிரியன் இத்தகைய சாதாரணத் தொழிலாளர்களுடன் ஒப்பிடமுடியாதவன். பணம் போட்ட பத்திரிகை உரிமையாளர் சொல்கிறார் என்பதற்காக அதை அப்படியே எழுதாமல் தனது மனச்சாட்சியும் அதை ஏற்றுக்கொள்ளுகிறதா என்பதை சிந்தித்துப்பார்க்கும் கடமை அவனுக்குண்டு. சமுதாயத்துக்கு அந்தக் கருத்து நன்மை செய்யுமா தீமை செய்யுமா என்பதையும் அவன் அலசி ஆராயவேண்டும்! எப்பொழுதும் சமுதாயத்தை முன்னிறுத்தியே ஒரு பத்திரிகை ஆசிரியன் சிந்திக்க வேண்டும்!

என்னுடைய பத்திரிகைப் பணியை பொறுத்தவரையில் நான் ஒருவகையில் கொடுத்துவைத்தவன்! சின்னவயதில் எந்த இலட்சியத்தை என்னுடைய மனதில் வளர்த்துக் கொண்டேனோ, அதே இலட்சியத்துக்காகவே நடைபெற்று வரும் ஒரு பத்திரிகை மூலம் சமுதாயப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது நான் செய்த பாக்கியமே.

அதைவிட என்னுடைய எழுத்து சுதந்திரத்தில் அதிக அளவில் தலையிடாத ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது சாதாரணமாக எல்லா எழுத்தாளனுக்கும் கிடைக்கமுடியாத ஒரு வாய்ப்பு!

ஒரு பத்திரிகை உயிரோட்டமுள்ளதாக இருக்கவேண்டுமானால் "செத்த" முதலாளியும் "உயிர்த்துடிப்புள்ள" ஆசிரியரும் இருக்க வேண்டும் என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி!

●

கவிதையெழுதவேண்டும் என்கிற ஆர்வம் இப்போது இளைஞர்களிடம் அளவுக்கதிகமாக வளர்ந்துள்ளதை எனக்கு நாள்தோறும் 'கவிதை' என்கிற பெயரில் ஏராளமாக வரும் 'வசனங்கள்' எடுத்துக்காட்டுகின்றன. சிலர் 'கவிதைகள்' என்ற பெயரில் தாம் எழுதிய வசனங்களை அனுப்பி அவற்றைப் பிரசுரிப்பதற்காக எனக்கு பணத்தையும் அனுப்பியுள்ளனர். நான் அவற்றை அவர்களுக்கே திருப்பி அனுப்பி வருகிறேன். இது அவர்களது தவறல்ல—வேறு எங்கோ யாரோ இப்படித் தவறு செய்வதால்தான், எனக்கும் இப்படி அனுப்புகின்றனர் என்று நினைக்கிறேன். காசு கொடுத்து பத்திரிகையில் கவிதையை பிரசுரித்துவிட்டால் கவிஞராகிவிட முடியாதென்பதை இந்த இளைஞர்கள் உணர வேண்டும்!

கோவைமகேசன்

இந்திரா ஜனநாயகவாதியா?

சி. வி. விவேகானந்தன் சட்டத்தரணி

அலகபாத்மேல் நீதி மன்றத்தில் இந்திரா காந்தியாரின் அரசியல் எதிரி ராஜ் நாராயணன் தொடர்ந்த வழக்கு, யூன் மாதம் 12ந் திகதி நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. மேல் நீதிமன்ற நீதிபதி லால் சின்கா இந்திரா காந்தியார் அரசாங்க சேவையிலுள்ள ஒரு சிரேஸ்ட அரசாங்க அதிகாரியை அவர் அரசாங்க ஊழியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவேளையில் அவரைத் தனது தேர்தல் ஏஜண்டாகப் பயன் படுத்தி அவரது சேவையை பெற்றார் என்றும் இந்திரா காந்தியாரின் தேர்தல்தொகுதியான ரெபெருரலியிலுள்ள உத்தரப் பிரதேச அரசாங்க அதிகாரிகள் இந்திராவுக்கான தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ஒழுங்கு செய்து, கூட்டங்களுக்கு பொலிஸ் படையைப் பயன்படுத்தியது என்றும் இவைகள் தேர்தல் ஊழல்கள் என்றும் அவரது தேர்தல் செல்லுபடியாகாதென்றும் தீர்ப்பளித்தார்.

ஜனநாயக அரசியல் முறையில் நீதிமன்றம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆகவே அதன் தீர்ப்பை மதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. இந்திரா காங்கிரஸ்வாதிகள் நீதிபதியின் கொடும்பாவியை எரித்து அவர் மீது குற்றம் சாட்டினர். நீதிமன்றம் அவமதிக்கப்படுவதை இந்திரா காந்தியாரும் அவரது சகதலைவர்களும் தங்களது மௌனத்தால் ஒப்புதலைத் தெரிவித்தனர். நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அவமதிப்பென்றால் ஜனநாயக நாட்டின் சட்டதிட்டங்களை செயல்படுத்துவது யார்? மக்கள் கட்டுப்பாடு இழந்து சட்டங்களுக்கே மதிப்பளிக்காது நடக்கத்தொடங்கலாமல்லவா?

தேர்தல் செல்லுபடியாகாது என்ற தீர்ப்பு வெளியானதும் இந்திராவின் வழக்கறிஞர்கள் தீர்ப்பு அமுல் செய்யப்படுவதை நிறுத்தி வைக்கும்படி மனு செய்தனர். நீதிபதி சின்ஹா அவர்களே தனது தீர்ப்பு 20 நாட்களுக்குப்பின் தான் அமுலுக்கு வரும் என தீர்ப்பளித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பின் எதிரொலியாக இந்திரா இராஜினாமாசெய்ய வேண்டுமென எதிர் அணி குரல் கொடுக்கத் தொடங்கியது. பலப்பரீட்சை டெல்லியில் மிக கடூரமாக நடத்தப்பட்டது. ஒவ்வொரு அணியும் தங்கள் பின்தான் மக்கள் சக்தியென கோஷமிட்டன. மக்கள் சக்தி தன் பக்கமெனவும், மக்களின் உரிமையைக் காப்பாற்ற தான் பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகப்படாது எனவும் இந்திரா எதிர் கட்சிகளைச் சாடத்தொடங்கினார். “இந்தியாதான் இந்திரா, இந்திரா தான் இந்தியா”வென கோஷம் எழுப்பப்பட்டது. இந்திராவுக்கு ஆதரவாகப் பல கூட்டங்கள் போடப்பட்டன. பத்திரிகைகள் வெளுத்து வாங்கின. இந்திரா எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைவெற்றிகரமாக சமாளித்துக்கொண்டிருந்தார்.

● அட்டைப் படக் கட்டுரை

அரசியல்அமளிதுமளி ஒருபுறமிருக்க மேல் நீதிமன்றத் தீர்ப்பின் அமுலை எவ்வித நிபந்தனையுமின்றி நிறுத்திவைக்கக் கோரிய இந்திராவின் அப்பீல் மனு நீதியரசர் கிருஷ்ண ஐயர் முன் 24ந் திகதி யூன் மாதம் எடுக்கப்பட்டது.

இந்தியாவின் புகழ்பெற்ற வழக்கறிஞர் திரு. பக்கிவாலா பிரதமருக்காகவும் திரு. சாந்தி பூஷண் திரு. ராஜ் நாராயணனுக்காகவும் ஏற்பட்டு இம்மனுவின் மீது வாதிட்டனர். திரு. சாந்தி பூஷண் 12ந் திகதியன்று கொடுக்கப்பட்ட மனுவில் “தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் பொருட்டு அவகாசம் கொடுக்கப்பட வேண்டும்” என்றும் கேட்டுக்கொண்டதாகவும் ஆனால், அப்படிச்செய்யாது நீதிமன்றத்தையே ஏமாற்றிவிட்டனரென்றும் அப்படியானவர்கட்கு நீதிமன்றம் துணைநிற்கப்படாது என்றும்

ஹர்த்தால் பிறந்த விதம்!

ஈழத் தமிழ் மக்களுக்கு நன்கு பரிச்சயமான “ஹர்த்தால்” என்கிற சொல் எப்படித் தோன்றியது என்று உங்களுக்குத் தெரியுமா? “ரௌலட்” என்னும் அடக்கு முறைச் சட்டத்தை எதிர்த்து இந்திய நாட்டில்தான் முதன்முதலாக “ஹர்த்தால்” அனுட்டிக்கப்பட்டது.

முன்பெல்லாம் எல்லாக் கடைகளையும் அடைக்கச் செய்ய, ஒவ்வொரு கடைகளின் பூட்டுக்களிலும் ஓர் எலும்புத்துண்டைச் செருகி வைத்து விடுவது வழக்கமாம். அப்படி எலும்புத்துண்டைப் பார்க்கும் கடைக்காரர்கள் அன்று கடையைத் திறக்கமாட்டார்களாம்.

“ஹட்” என்ற ஹிந்தி வார்த்தை எலும்பையும் “தால்” என்ற வார்த்தை பூட்டையும் குறிப்பிடுவன. அதனால்தான் கடையடைப்புக்கு “ஹர்த்தால்” என்று பெயர் வந்தது.

—யாழ் மீனம்

வாதிட்டார் திருபக்கிவாலா. அந்த மனுவில் “ஒரு தலைவரைத்தெரிவுசெய்ய அவகாசம் வேண்டும்” என்றும் கேட்டுக்கொண்டதாகவும் ஆனால், அப்படிச்செய்யாது நீதிமன்றத்தையே ஏமாற்றிவிட்டனரென்றும் அப்படியானவர்கட்கு நீதிமன்றம் துணை நிற்கப்படாது என்றும் வாதிட்டார். திரு. பக்கிவாலா, அந்த மனுவில் “ஒரு தலைவரைத்தெரிவுசெய்ய அவகாசம் வேண்டும்” என்றுதான் கேட்கப்பட்டதாகவும் அதன்பிரகாரம் காங்கிரஸ் இந்திராவையே தலைவராக ஏகமனதாக ஏற்றுக்கொண்டதாகவும் அந்த மனுவில் “வேறு ஒரு தலைவரைத் தெரிவுசெய்ய அவகாசம் வேண்டும்” என்று கேட்கப்படவில்லையென்றும் வாதிட்டார். திரு. பக்கிவாலாவின் வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

நீதிமன்றங்களில் சட்டநெறிமுறைகளின்படி வழக்குகள் நடைபெறுகின்றன. சட்டத்திற்கமையத் தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

அலகபாத் நீதிமன்றம் கூறுகின்ற குற்றச் சாட்டுக்கள் சிறு சட்ட நுணுக்கங்கள்; பாரதூரமான குற்றங்கள் அல்லவென்றும் அதனால் பிரதமர் இராஜினாமாச் செய்யத்தேவையில்லை என்று இந்திராவின் கட்சியாளர் கூறுகின்றனர். குற்றம் குற்றம்தான். ஒரு சதம் களவெடுத்தாலும் களவுதான்; நூறு ரூபா களவெடுத்தாலும் களவுதான். தண்டனையில் வித்தியாசமிருக்கலாமே தவிர குற்றத்தில் வித்தியாசமில்லை.

நீதிமன்றத் தீர்ப்பின்படி பிரதமர் பதவியிலிருந்து வீலகத்தேவையில்லைத்தான்; ஆனால், ஜனநாயக மரபின்படி, நாடாளுமன்ற நெறி முறைகளின்படி ஆராயின் இந்திரா காந்தியார் தனது பதவியிலிருந்து விலகத்தான்வேண்டும்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியதுபோல் அவராகவே விலகினால் நாட்டிற்கும் அவருக்கும் அழியாப்புகழைத்தேடித் தந்திருப்பார். எந்தச்சேற்றைவாரி இறைத்தாலும், கலைஞரின் ஆட்சி ஜனநாயக மரபுகளைப்பேணிப்பாதுகாப்பதில் இமயமலைபோல் உயர்ந்து நிற்கின்றது.

ஊழல் குற்றங்கள் சிறு சட்ட நுணுக்கங்களினால் ஏற்பட்டவையென்று வாதிடுபவர்கட்கு நீதியரசர் கிருஷ்ண ஐயரின் கூற்றை கூறினால் மட்டும் போதும்.

“Mr. Palkivala assailed, in his opening submissions, the two findings recorded against the appellant holdidg her guilty of corrupt practice. Indeed he was at pains to convince that his client had a strong prima facie case on the meits, in the sense that the judgment, on its face, was perverse and legally untenable,”

உயர்நீதி மன்றத்தீர்ப்பு பிரதமருக்கு எதிராகவிருந்தாலொழிய அவர் பதவி விலகவேண்டியதில்லை என்ற வாதத்தைதேர்தல்சட்டத்தின்படி ஏற்றுக்கொண்டாலும் ஜனநாயக நாடாளுமன்ற அரசியற்கோட்பாடுகளின்படி நடைமுறைகளின் பிரகாரம் பிரதமர் பதவி விலகவேண்டியதை ஜனநாயக உணர்வு கொண்டவர் எவரும் ஒத்துக்கொள்வர்.

12ந் திகதி தொடக்கம் 26ந் திகதிவரையும் மக்கள் சக்தியில் நம்பிக்கை கொண்டவர், 27ந் திகதி, உயர் நீதிமன்றம் அவருக்குசாதகமான தீர்ப்பை அளிக்கவில்லையென்றதும், அவசரகாலச் சட்டத்தின் கீழ் தஞ்சம் புகுந்துகொண்டார்; ஆயிரக்கணக்கானோரை சிறைக்கம்பியின் பின்னால் நிற்பாட்டியது மக்கள் சக்தி அவருக்குத் துணை நிற்பதனாலா? நீதிமன்றம் சறுக்கிவிட்டது; மக்கள் மன்றமும் சறுக்கலாம் எனக் காந்தியார் எண்ணினாரா?

பெரிய தலைவர்களை சிறை கொண்டார். எதிர்க் கட்சித் தலைவர்களை கைதுசெய்தார். மனுதாரையும் கைதுசெய்துகொண்டார். இதுதான் ஜனநாயக பண்பா? எந்த ஜனநாயக நாட்டில் மனுதாரைக் கைதுசெய்து வழக்கினை நடக்கவிடாதுதடை செய்வது நடைபெற்றன?

இவ்வளவு காலமும்கொண்டுவராத சமுதாயப் புரட்சித் திட்டங்களை உடனடியாக அவசரகாலத்தில் கொண்டு வந்ததின் காரணமென்ன? மக்கள் சக்தியைத்தன் பக்கம் கவரவா?

பேச்சு சுதந்திரத்திற்கும் தடைபோட்டு எழுத்துச் சுதந்திரத்தையும் இல்லாதுசெய்து முழுத்தணிக்கையையும் கொண்டு வருவானேன்? கூட்டப்போகின்ற நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பேச்சுக்களை பிரசுரிப்பதற்கு எதற்காகத் தடை விதிப்பான்?

மேற்கு ஜெர்மனி வில்லி பிராண்ட் தனது ஊழியரில் ஒருவரை நீதிமன்றம் குற்றவாளியெனக் கண்டதும் தனது பிரதம மந்திரிப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்; மந்திரிசபை கூறியது; மக்கள் கூறினர் விலகவேண்டாமென்று; ஆனால் வில்லி பிராண்ட் பிரதம மந்திரிப் பதவியை விட்டெறிந்தார்.

தமது ஊழியர்களின் பிழைக்காகவே தமது பதவிகளைத் துறந்த அரசியல் தலைவர்கள் பாரத நாட்டிலில்லையா? எத்தனையோ தலைவர்களையும், ஞானிகளையும், அறிஞர்களையும் இந்திய நாகரிகத்தையும் உலகுக்களித்த பாரதத்தின் தலைவிதி இந்திராவின் கையில்தான் உண்டா?

காந்தியார் சுடப்பட்டபொழுது, நேரு மறைந்தபொழுது நாடு சின்னா பின்னப்பட்டதா? சீனாவும் பாகிஸ்தானும் படை யெடுத்தனவா? தங்களது பதவிகளைக் காப்பாற்றுவதற்காக விக்கிரமாதித்தன் கதை கூறிய அரசியல் வாதிகளும் இந்தியாவில் இருந்தார்களா?

தற்பொழுது நடைபெறும் சம்பவங்கள் ஜனநாயக உணர்வுக்கு ஊறு விளைப்பதாகவே இருக்கின்றன. வருங்கால சம்பவங்களும் இந்திய வரலாறும் இந்திரா காந்தியார் ஒரு முழுமையான ஜனநாயக உணர்வுள்ள அரசியல் வாதியா என்பதைக் கூறவேண்டும்.

பிரளயம்

பாண்டியூரான்

சிற்றம் பலத்தில்
திருநடனம் செய்வோனே!
நெற்றி விழியின் நெருப்பை
எமக்குத்தா!
காண்டா வனத்தைக்
கனலுக் கிரையாக்கி,
நீண்ட அரவம்; நிணமுண் புலிகரடி
ஆணவத்தில் மிக்க
அரக்கர். அழகுமலர்,
பேணத் தகுந்த இனிய கனிமரங்கள்
அத்தனையும் நீறாய் அழித்தான்...
அருச்சுனனும்!

●

மெத்தச் சினந்து
விளையாட்டுச் செய்பவன் நீ!
அர்ச்சுனனை வெல்லும்
அழிவுக் கருவிகளை
துர்ச்சனரை வெல்லத்
துடிப்போர்க்கு ஈயாயோ...?

●

எங்கள் மனத்தில்
எழும்பும் சுடர்த்தீயை
மங்குல் படிந்து அவிக்க
விடுவோமோ...?
எங்கள் அகப்பை
நிறைக்கின்ற கல்லையிலே
பொங்கத் தகாத
புழுதியினைக் கொட்டுகிற
அற்பர்களின் வாழ்வை
அழிக்கக் கனல்கக்கும்
நெற்றி விழியின்
நெருப்பை எமக்கு தாத்!

நேற்றின்று நாளை
நிலைமை பிசகாத
ஆற்றல் மிகுந்த அழகுடைய
நம்மிதயம்
கூற்றுவனைக் கூட
குலைநடுக்கம் செய்தற்கு
நெற்றி விழியின்
நெருப்பை எமக்குத்தா!

●

தின்பார்க்குத் தேனை
திரவியத்தை நாம் கொடுத்து
மன்பதைக்குள்...
மானமிலா மாக்களென
வாழோம் நாம்!
அன்பால் நெருங்கி
உறவாடும் அன்பர்க்கு,
துன்பத்தைத் தின்று...
தூய உயீரளிப்போம்!
ஆட்டிப் படைக்கும்
அடக்குமுறைப் பேதத்தை
காட்டிக் கொடுக்கும்
கயமைக் கொடியவரை,
சுட்டுப் பொசுக்கச்
சுடர் விழியின் தீயைத்தா!

●

உள்ளம் இருந்தும்,
ஒலியீல்லா ஊமையைப்போல்
கள்ளர்களின் மத்தியிலே
கைகட்டி நின்றிடவா?
ஊமை மனத்தில்
உரமுண்டு!
என்பதனை

ஆமைபோல் வாழ்ந்தால்
அறியார் பகைவரஃதால்
சிற்றம் பலத்தில் திருநடனம்
செய்வோனே!
நெற்றி விழியின் நெருப்பை
எமக்குத் தா!

◆

பற்றைகளும், முள்ளும்
பையரவச் சாதிகளும்,
குற்றமெனும் பற்றைக்குள்
குந்தும் கரடிகளும்,
ஊனருந்திக் காளை
உரிமைகொளும் பாய்புலியும்,
'ஊத்தை'களைத் தின்றிரவில்
ஊளையிடும் புன்னரியும்,
எங்கள் வழிக்கு
இடர்செய்த ஓர் காலம்
பங்கப் படட்டும்!
பல கை ஒருகையாய்
ஓங்கும் நெருப்பை
உயர்த்திப் பிடிக்கட்டும்!
தூங்கும் அறிவு புயலாய்ச்
சுவறட்டும்!
மூர்க்கம் மிகுந்த முயலகரை
நம்பாதம்; தூர்த்து... மிதித்து...
துடிக்க வதைக்கட்டும்!
கையில் இருக்கும்
கடப்பாரை,
புற்றுகளை...
நையப் புடைத்து...
நறுக்கட்டும் பாம்புகளை!
எங்கள் கரத்தில்
இருக்கும் உடுக்கைகளோ
சங்காய்... முரசாய்...
சகத்தில் முழங்கட்டும்!
கையில் இருக்கும் கனவில்
இடி பிறந்து...
ஒய்யாரக் கோட்டை
உதிர நொறுக்கட்டும்!
மானும் மழுவும் மதகைத்
திறக்கட்டும்!
ஆறுகளிற் பாயும் நம்
ஆவேச வெந்நீரால்...
பேதம் கலையும் பிரளயம் ஒன்(று)
ஆகட்டும்!
ஓர் பாதம் தூக்கி உயர்த்தும்
பொழுதினிலே...
கார்மேகம் பேர்ந்து கடலும்
கொதிக்கட்டும்!
மற்றோர் சுவட்டில்...
மலைகள் தகரட்டும்!
உற்றார் எவரும்
உருத்திரராய் ஆடியிந்த
ஊழிப் பிரளயத்தை
ஓர் நொடியிற் செய்யட்டும்!
நாளிலே காண்போம் நலம்!

நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியான
மில்க்வைற் தயாரிப்புக்களின் புதிய விலைப்பட்டியல்

மில்க்வைற் நீலசோப்	1 கட்டி சதம்	0.50
நியூ மில்க்வைற் சோப்	1 ,, ,,	0.70
மில்க்வைற் பார் சோப் — பெரியது	ரூபா	3.30
,, பார் சோப் — சிறியது	,,	1.65
,, துண்டு சோப் — பெரியது	,,	0.25
,, துண்டு சோப் — சிறியது	,,	0.10
,, சலவைப் பவுடர் 6 அவு.	1 பெட்டி ,,	1.25
,, சலவைப் பவுடர் 3 அவு.	1 பைக் சதம்	0.60
,, சலவைப் பவுடர் 1 அவு.	1 பைக். ,,	0.25
,, சலவைப் பவுடர் 1 இரு.	1 பைக். ரூபா.	3.50
நீம் வாசனை சோப் (வேப்பெண்ணெய் கலந்தது)	1 கட்டி ,,	1.00
மெடிக்கேட்டற் சோப்	1 கட்டி சதம்.	0.90

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி-7233.

கிளை 70, மெசஞ்ஜர் வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி-36063-

குறுங்கதைகள்

வ. அ. இராசரத்தினம்

பாலம்

இலக்கிய உணர்வுள்ள இளைஞர்கள், 'ஆச்சார்யா'க்களை அழைத்து உபதேசம் பெற விருப்பினர்.

அழைப்புக்கள் பல வினயமாக விடுக்கப்பட்டன. ஆனால் ஒரு நாளாவது அவர்கள் வரவில்லை!

விமானப் பயணச்சீட்டும் ஹொட்டல் செலவையும் கொடுக்க இளைஞர்களிடம் பணமில்லை.

பெரியவர்கள்

''எல்லாப் பொருட்களுமே நெருப்பு விலையாக இருக்கும் போது எப்படித்தான் வாழ்க்கையை நடத்துகிறது'' என்று குறைப் பட்டுக் கொண்டாள் மனைவி.

''விலைவாசி ஏற்றம் வாழ்க! அதற்குக் காரணமாக இருப்பவர்கள் வாழ்க வாழ்க!'' என்று கோஷித்தான் கணவன்.

"உங்களுக்கென்ன பைத்திமா? மனைவி கடிந்து கொண்டாள்.

எனக்கா பைத்தியம்? வள்ளுவனும் எத்தனையோ மதப்பெரியார்களும் 'மதுவுண்ணல் பாவம்' என்று காலங்காலமாகச்சொல்லி வந்தார்கள். விட்டேனா நான்? ஆனால் விலைவாசி ஏற்றம் அதனை மறக்ககடித்துவிட்டது. ஆகவே விலைவாசியை உயர்த்தியர்வகள் வாழ்க! நீடுழி வாழ்க! என்று மீண்டும் கோஷித்தான் கணவன்,

யாகம்

எத்தனை நாட்களுக்குத்தான் எதிர்க்கட்சியிலிருந்து இன்னலடைவது? மத்திரியாரை அழைத்து மரியாதை செய்தாற்தான் நமக்கு விமோசனம் கிடைக்கும். நமது கிராமத்திற்கு வேண்டிய சலுகைகளை அப்போதுதான் பெறலாம்'' என்றனர் கிராமத்து முற்போக்காளர்கள்.

கிராமவாசிகள் பலரும் அதற்கு இணங்கினர்.

மாலை மரியாதைகள் பூரண கும்பங்கள் மகரதோரணங்கள், மேள வாத்தியங்கள் எல்லாமே அபாரம்! மந்திரியாரும் பரிவாரங்களும் வரவேற்கப்பட்டனர்.

இரண்டு ஆட்டுக் கடாக்கள் பலியாயின.

விருந்துபசாரத்தின் பின்னர் சிக்கனத்தின் அவசியம் பற்றியும், உபதானியங்களை உண்ணவேண்டிய தேவையைப் பற்றியும் மந்திரி பேசினார்.

பதிவிரதை

"எனக்கு இம்முறை வெளிநாட்டு உதவி நிச்சயம் கிடைக்கும். அதற்கு உன். உதவியும் தேவை.''

"நான் என்ன செய்யலாம்?

அவன் பதில் பேசவில்லை.

பின்னர் ஒரு நாள் அவன் தன் மேலதிகாரியோடு வீட்டுக்கு வந்தான். இருவருக்கும் நல்ல 'கலை.' அந்தக் கலையிலே தன் மனைவியிடம் சொன்னான் "உன் உதவி இன்று அவசியம் தேவை.''

அதைச் சொல்லியதும் கணவன் தன்னந்தனியனாக வீட்டை விட்டு வெளியிலே சென்றான்.

தராசு

எந்நேரமும் படிக்கல்லின் பக்கமாகவே தராசு தாழ்ந்திருப்பது அவ்விளைஞனுக்கு நீண்ட நாட்களாக ஆத்திரத்தைக் கொடுத்தது.

ஒரு நாள் கடைக்காரனைச் சாடிவிட்டான். கோட்டிலே வழக்குத் தொடரப்பட்டது.

தீர்ப்புக் கூறப்படுகையிலும் அவ்விளைஞன் 'எந்நேரமும் தராசின் படிக்கற் பக்கமே தாழ்ந்திருக்கிறது: இதைத் தவிர்க்க முடியாதா? என்றே சிந்தித்துக் கொண்டிருந்தான்

கண்டோம் கருத்தறிந்தோம்!

இக் காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணியாற்றுபவர்கள் யார் யார் என்று ஒரு பட்டியல் தயாரிக்க எந்தக் கலாநிதியைப் பணித்தாலும் அந்தப் பட்டியலில் முதல் ஐந்து பேர்களில் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் இருப்பது உறுதி. தற்கால இலக்கிய வளர்ச்சி பற்றியும் தமிழில் வெளிவந்த நூல்கள் பற்றியும் அடிமுடிதேட வேண்டுமானால் யாழ்ப்பாணத்திலுள்ள குரும்பசிட்டிக்குச்சென்று அங்கு இரசிகமணியைக் கண்டால் போதுமானது. சிறுகதை, நாவல், கட்டுரை, அறிமுகம், விமர்சனம், நூல்கள், பாடப் புத்தகங்கள், என்று அவர் கைவண்ணம் பரந்து விரிந்துகிடக்கின்றது.

காலத்திற்கு ஏற்றவகையில், இலக்கியத்தில் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்து கடந்த 37 ஆண்டுகளாகத் தமிழ் வளர்ச்சியில் திளைத்திருக்கும் இரசிகமணியை பாயும் படுக்கையுமாய் நோயுற்றிருக்கும் நிலையில் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த ஆஸ்பத்திரியில் ஆறு தடவைகளுக்கு மேல் சந்தித்து உரையாடியதால் நான் அறிந்து கொண்ட இலக்கியப் புதினங்கள் எழுத்தில் அடங்காதவை. ஈழத்தில் இலக்கிய விழா, வெளியீட்டு விழா என்று ஓடியாடித்திரிந்த இரசிகமணி இன்று ஒரு காலின்றி, கோலூன்றியும் நடமாடமுடியாமலிக்கும் நிலையில் அவரைச் சந்தித்தபோதும் இலக்கிய நயம் சொட்டச் சொட்ட எனக்கு எடுத்துச் சொன்னவற்றை ஒரு நூலாகவே ஆக்கலாம்.

பத்திரிகையில் எழுதுவதுடன் இலக்கிய சேவை முடிந்தது, நாமும் எழுத்தாளராகி விட்டோம் என்று இறுமாந்திருப்பவர் மத்தியில் "ஏறுபோல் பீடு நடை" போட்டு இலக்கியத்தின் உரைகல்லாக விளங்குகின்றார் இரசிகமணி.

அவர் சேர்த்துக் காத்த நூல்களின் பயனாகப் பல்கலைக்கழகப்பட்டம் பெற ஆராய்ச்சி செய்த மாணவர்களுக்கு, உண்டியும் உறையுளும் கொடுத்து உதவியதை அவரை நன்கு அறிந்தவர்தான் அறிவர். நூல் நிலையத்தில் சேர்த்து வைத்த நூல்களில் ஐயாயிரம் ரூபா வரை பெறுமதியான நூல்களைச் சமீபத்தில் விற்றுவிட்டார். இன்னும் பல நூல்கள் அவரிடம் இருக்கின்றன. இதிலிருந்து நூலுக்காக அவர் செலவிட்ட பணத்தை நாம் மதிப்பிடலாமல்லவா?

1938லிருந்து உபகுப்தன், பரிதி, செவ்வேல், வேள், பரதன் என்ற புனை பெயர்களில் எழுதி வந்த இரசிகமணி கரவைக் கவி கந்தப்பனாகி நாற்பது ஈழத்துப்பேனா மன்னர்களை ஈழகேசரியில் அறிமுகப்படுத்திப்பிரபலமானார். அவர் செய்த அறிமுகம் தமது நூல் நிலைய உதவியுடன் மாத்திரம் செய்யப்பட்டதென்பதை அறிந்து வியப்புற்றேன்.

இரசிகமணி
கனக-செந்திநாதன்

ஈழத்து நூலுக்கு இரசிகமணி மதிப்புரை எழுதினால் அந் நூலுக்குக் கிராக்கி ஏற்படுவது சகஜம். 1969ல் "மலேசிய மணிக்கதைகள்" என்ற சிறுகதை நூலுக்கும் மதிப்புரை வழங்கியிருக்கிறார்.

"கனகசெந்திநாதன் என்னிடம் என்ன பெற்றாரோ நான் அறியேன். அவரிடம் நான்

பெற்றவை அதிகம். செந்திநாதன் நவீன இலக்கிய உலகைத் தரிசிப்பதற்கு ஒரு தூர திருஷ்டிக் கண்ணாடியாய் எனக்கு அமைந்திருந்தார் என்கிறார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. பண்டிதமணியின் பாராட்டைவிட வேறு பாராட்டும் வேண்டுமோ அவருக்கு.

திரு. எஸ். பொ. வின் வேண்டுதலினால் கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1964 வைகாசி 19ம் நாள் பொன்னாடை போர்த்திப், பொற்பதக்கம் சூட்டி, புலவர்மணி மூலம் "இரசிகமணி" என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைபெற்றது. ஈழத்துப் படைப்பிலக்கியம் பற்றி அபாரஞாபக சக்தியால், தெளிந்த கண்ணோட்டத்துடன் கணக்குத் தவறாது விமர்சனம் செய்யும் இரசிகமணியின் கருத்துக்களைச் சுடர் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்கின்றேன்.

கே:- எழுத்தாளனாகத் தங்களை ஆக்கிய பிரமுகர்களைக் குறிப்பிடுகிறீர்களா?

ப:- ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையாவின் துணையால் ஈழகேசரி ஆசிரியராக இருந்த திரு. சோ. சிவபாத சுந்தரம், சாரு தொடர்பு ஏற்பட்டது. இதனால் இலக்கிய ரசனை உண்டாகி எழுதத் தூண்டியது. அத்துடன் இவர்கள் புதுமை இலக்கியகாரர்களது எழுத்தைப்பற்றி அதிகம் சொன்னார்கள். புதுமைப் பித்தன், கு. ப. ரா. பற்றியும் அதிகம் தெரிந்துகொண்டேன். இவர்கள் இட்ட அத்திவாரத்தின் மேல்தான் எனது பிற்காலப் படைப்புக்கள் தோற்றம் பெற்றன. திரு. சிவபாத சுந்தரத்தின் பின் ஈழகேசரி ஆசிரியராக இருந்த திரு. இராஜ அரியரத்தினம் நாவல் எழுத ஊக்குவித்தார். விதியின் கை, வெறும் பானை ஆகிய நாவல்கள் ஈழகேசரியில் வெளிவர அவரே காரணமாக இருந்தார். வீரகேசரி நிருபர் திரு. செல்லத்துரையின் தொடர்பால் வீரகேசரியில் எழுதினேன். கலாநிதி கைலாசபதி தினகரன் ஆசிரியராக இருந்தபோது தினகரனில் ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதினேன். ஈழகேசரி காலத்தில் ஈழகேசரிக்கன்றி வேறு எந்தப் பத்திரிகைக்கும் நான் எழுதியதில்லை.

கே:- பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கும் உங்களுக்கும் நீண்ட காலத்தொடர்பு இருந்ததாமே?

ப:- இன்று 15 புத்தகங்களை எழுதி வெளியிடவும் 20 புத்தகங்களை வெளியிட தயார் நிலையில் வைத்திருக்கவும், மற்றும் 200 கட்டுரைகளையும் வானொலிப்பேச்சுக்களையும், 30 சிறுகதைகளையும் 2 நாவல்களையும் 5 நாடகங்களையும் எழுதவும் இரசிகமணி என்று என்னைப் பிறர்பாராட்டவும் தகுதி கிடைத்தது பண்டிதமணியின் தொடர்பினாலேயே தான் என்றால் அது பொய்யல்ல. பதினெட்டு வயதிலேயே பத்திரிகை சஞ்சிகை படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பண்டிதமணி, அமரர் திரு. பொ. கைலாசபதி தொடர்பால் இலக்கிய ஆர்வமும் ரசனையும் ஏற்பட்டது. அக்கால இலக்கிய கர்த்தாக்களை எனக்கு நன்கு அறிமுகப்படுத்தி வர்ணனைக்குக் கல்கியும், சம்பாஷனைக்கு டாக்டர் சாமிநாத ஐயரும், தனித்தமிழ் நடைக்கு மறைமலை அடிகளும் என திரு. கைலாசபதி எடுத்துக் காட்டி வாசிப்புத்தாகத்தை ஏற்படுத்தினார். பண்டிதமணியிடம் 30 வருடங்களாக கிழமையில் ஒரு நாள் சென்று இலக்கியத்தை அறிந்து வந்திருக்கிறேன், இனி அந்த வாய்ப்பு ஏற்படப் போவதில்லை. நான் நோயாளியாயிருக்கிறேன்.

யார் இந்து?

நெற்றியில் திலகமோ மத சின்னமோ, மந்திரங்களை ஸ்பஷ்டமாக உச்சரிப்பதோ சேத்திராடனங்கள் புரிவதோ, ஜாதிக் கட்டுப்பாட்டின்படி நடப்பதோ ஒருவனை ‘இந்து’ ஆக்கிவிடமுடியாது. இந்து மதம் என்பது கருணையினாலும் தியாகத்தினாலும் நிரம்பியது. —காந்தியடிகள்.

கே. தங்கள் முதலாவது படைப்பைப் பற்றிச் சொல்வீர்களா?

ப:- பாரதி கண்ட சகுனி பற்றி ‘நொள்ளைக் கதைகள் சொல்லும் கள்ளச் சகுனி’’ என்ற முதலாவது கட்டுரை 1939ம் ஆண்டும் "மன்னிப்பு" என்ற சிறுகதை 1940ம் ஆண்டும் ஈழகேசரி ஆண்டு மலர்களில் வெளிவந்தன.

கே:- எழுத்தை எப்படி மதிக்கிறீர்கள்?

ப:- எழுதுவது ஒரு கலை. அக்கலை நன்கு கைவருவதற்கு நல்லாசிரியர்களது தொடர்பு வேண்டும். முதிர்ந்த எழுத்தாளர்களது ஆலோசனைகளைக்கேட்டு நடக்கவும் வேண்டும். தான் எடுத்துக்கொண்ட துறையைப் பற்றி நன்கு படித்துணரவேண்டும். பத்திரிகையில் வெளிவருவது பற்றிக் கவலைப்படாமல் தினமும் இவ்வளவு பக்கம் எழுதுவது, இத்தனை பக்கம் வாசிப்பதென்று வரையறை செய்து கொள்ளவேண்டும். பின்னர் எழுத்துத் தானாகவே பேனாவில் ஊற்றெடுக்கும்.

மனைவி:- என்ன அத்தான், வேலைக்குப் போனாலும் எந்நேரமும் என்னருகிலேயே பேசிக்கொண்டிருப்பேன் என்று கூறுகிறீர்களே — அதெப்படி முடியும்?

கணவன்:- கண்ணே, நான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளர் என்பதை மறந்துவிட்டாயா?

—செல்வி ஜே. ஏ. டோசன்
பதுளை

கே:- ஈழத்திலும் தமிழகத்திலும் வெளிவரும் தற்காலப் படைப்புக்கள் பற்றிச் சுருக்கமாகச் சொல்வீர்களா?

ப:- தற்காலப் படைப்புக்களில் இந்தியாவிலும் பார்க்க ஈழமே முன்னணியில் இருக்றது. இதனை தான் உறுதியாகச் சொல்லுகின்றேன். ஒரு நூல் இங்கு வெளியிடப்படுவது எழுதும் எழுத்தாளனின் முயற்சியினாலேயே. இந்நிலை தமிழகத்தில் இல்லை. அங்கே பதிப்பாளர்களே நூல்களை வெளியிடுகிறார்கள். அவர்களது நோக்கம் வியாபாரத்தையே பின்னணியாகக்கொண்டிருக்கின்றது. ஈழத்து எழுத்தாளர் அப்படியல்ல. தன் கைப் பொருளையே செலவிட்டு நூலை வெளியிட்டு அதிலும் நஷ்டப்படவேண்டியுள்ளது. இது கவலைக்குரியது.

கே:- தாங்கள் வெளியிட்ட நூல்களில் தங்களால் மதிக்கத் தக்கவை யாவை?

ப:- "ஈழத்து இலக்கிய வளர்ச்சி," "ஈழம் தந்த கேசரி" திறவாதபடலை, கடுக்கனும் மோதிரமும் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கே:- புதுக் கவிதை புற்றீசல் போல் புறப்பட்டிருக்கிறது. இது பற்றி...?

ப:- புதுக் கவிதையில் இலக்கியமோ, இலக்கணமோ இல்லை. படைப்பாளிகள் எண்ணத்தை வாசகர்களால் புரிந்துகொள்ளமுடியாமலும்போகிறது. வாசகனின் இலக்கிய ரசனைக்கேற்றவாறு புதுக்கவிதை புரிந்து கொள்ளப்படுகிறது. பொருள் நல்லதாக இருந்தால் மட்டுமே இந்தப் புதுக்கவிதை வாழும்.

கே:- நியூ வேவ் கதை என்று எழுதுகிறார்களே படிப்பதுண்டா?

ப: படித்துப் பார்க்கிறேன். அனேக பத்திரிகைகளில் வரும் நியூ வேவ் கதைகள் ஆபாசத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இந்த மாதிரிக் கதைகள் தற்காலச் சமூக வளர்ச்சிக்கு ஏதாவதொரு துணைசெய்யுமென்று நம்பமுடியவில்லை.

கே:- சஞ்சிகை, நூல்களை வெளியிடுவோருக்குத் தாங்கள் காட்டும் பாதை யாதோ?

ப:- பத்திரிகை, நூல்களை எந்த வாசகனுக்காக வெளியிடுகிறோம் என்று முதலில் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். வாசகனின் வாசிப்புத் தாகத்தைத் தீர்க்கும் விடயங்கள் இடம்பெறவேண்டும். கலப்படம் செய்து தலையணை உறையில் பஞ்சடைவதுபோல் அடைத்து எல்லா வாசகர்களையும் திருப்திப்படுத்த முயலுதல் கூடாது. பத்திரிகைக் கலை, அமைப்புச் சம்பந்தமான அறிவு மிக அவசியம்.

கே:- இலக்கிய ஆர்வமுள்ள இளைஞனுக்குத் தாங்கள் கூற விரும்புவது யாது?

ப:- ஒவ்வொரு இளைஞனும், தத்தமக்கு உரிய துறையைத் தெரிந்தெடுத்து அதற்கு வேண்டிய மூலாதாரமான நூல்களையும் அந்த அந்தத் துறையில் முன்பிருந்தோர் செய்து வைத்துச் சென்றவற்றையும் படித்தல்வேண்டும். ஈழத்துத்தமிழ் இலக்கிய பரம்பரை, அதற்குள்ள தனித்தன்மை என்பவற்றை முறையாக அறிதல்வேண்டும். தத்தமக்கெனத் தனித்தன்மை பெற்ற எழுத்தும், சுயசிந்தனையும் பெறத் தெண்டிக்கவேண்டும்.

கே:- ஈழத்து நூல்களுக்குத் தமிழக அரசு மூவாயிரம் ரூபா பரிசு வழங்க இருப்பதாக அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவித்திருக்கிறாரே?

ப:- ஈழத்தில் சாகித்திய மண்டலமும் இந்தியாவில் சாகித்திய அகடமியும் பரிசு வழங்கி வருகின்றன. அத்தகைய பரிசு வழங்குவதில் குறைகள் இருப்பதாகவும் பேசிக்கொள்ளப்படுகின்றது. பரிசு அளிப்பதனால்தான் நல்லிலக்கியங்கள் வளர்ச்சிபெறுமென்றும் குறிப்பிடமுடியாது. தமிழ் வளர்ச்சிக் கழகம் நம்நாட்டு எழுத்தாளர்களுக்கு பரிசு வழங்குவதன் பலாபலனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கே:- தமிழக சஞ்சிகைகள், பத்திரிகைகள் தடையால், ஈழத்து இலக்கிய கர்த்தாக்களுக்கு அதிர்ஷ்டமடிக்குமென்று எண்ணியிருந்தவர்கள் இன்று ஏமாந்துவிட்டார்கள் என்கிறேன். இதுபற்றித் தாங்கள் யாது கருதுகிறீர்கள்?

ப:- ஆரம்ப காலத்தில் இந்தத் தடையை நானும் வரவேற்றேன். ஈழத்து இலக்கிய கர்த்தாக்களும். எழுத்தாளர்களும் பயன்பெறுவார்கள் என்றும் நம்பினேன். ஆனால் எதிர்பார்த்தபடி அந்தத் தடை ஒரு பெரும் பயனை அளிக்கவில்லை என்பதை இன்று ஒப்புக்கொள்ளுகிறேன்.

கே:- சுடரின் வளர்ச்சிக்குத் தங்கள் ஆலோசனையைத் தெரிவிப்பீர்களா?

ப:- வெளிவந்த மூன்று சுடர்களையும் நோயுற்றிருக்கும் இந்த நிலையிலும், படுத்த படுக்கையாக இருந்தும் மெத்தக் கவனமாகப் படித்துப் பார்த்தேன். சுடரின் அமைப்பு என்னைக் கவர்ந்துவிட்டது. சிறுகதைகளின் தரம் இன்னும் உயரவேண்டும். மூன்றாவது இதழில் வந்த "பொன்னகரம்" போன்ற கதைகள் அந்தக் காலத்தில் புரட்சிகரமான கதையாக இருந்திருக்கலாம். இந்தக் காலத்திற்கு அப்படியான கதைகளை சுடர்போன்ற சஞ்சிகைகள் வெளியிடுவதை நான் விரும்பவில்லை. அத்தகைய கதைகளுக்குப் பதிலாக 30 வருடங்களுக்கு முன்வெளி வந்த நல்ல சிறுகதைகளை அறிமுகப்படுத்தலாம். கனமான இலக்கியக் கட்டுரைகள் வரவேண்டிய அவசியம். ஈழத்தில் நடைபெறும் நாடகங்கள் பற்றிய விமர்சனம் வெளிவருவதும் விரும்பத்தக்கது. அரசியலில் மூழ்கியிருக்கும் திரு. கோவை மகேசன், சுடரையும் வெற்றிகரமாக நடாத்துவதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். வாழ்க சுடர்! வளர்க தமிழ்!

—செவ்வி கண்டவர்: புத்தொளி.

நான் உடலல்ல - ஆத்மா

கே. எஸ். ஆனந்தன்



எதிர்பாராதவிடத்தில் அவனைப் பார்த்ததும் தீயை மிதித்ததுபோல துடி துடித்துப் பின்வாங்கினாள் மாலினி. ஆனாலும் அவனுடைய முகத்தையும், அதில் சுழலும் அந்த அழகிய விழிகளையும் மீண்டும் பார்க்க வேண்டும் போன்ற ஒரு தவிப்பு—அது அவளையறியாமல் அவளுள்ளத்துணர்ச்சிகளின் சிலிர்ப்பினால் ஏற்பட்ட ஒருவித ஏக்கம்—அதன் காரணமாக எழுந்த ஒருவித கவர்ச்சி உந்தல், சூழ்நிலையை மறந்து அவனை நிமிர்ந்து நோக்கினாள். ஆனால் அவன்?

அவளைப் பார்த்தும் பாராதவன் போன்று, தன்னை அவள் பார்க்கின்றாள் என்பதை உணர்ந்தும் உணராதவன்போன்ற எதுவிதமான அதிர்ச்சிக்கும் ஆளாகாத நிலையில் தன்னருகில் நின்ற ஒருத்தியுடன் உரையாடிக்கொண்டு நின்றான் பரந்தாமன். அவனோடு—பேசிக்கொண்டு நிற்கும் மகிழ்ச்சியின் காரணத்தாலோ என்னவோ அந்த அழகிய யுவதி புன்னகை பூத்துக் குலுங்கும் வதனத்துடன் மகிழ்ச்சியின் பூரண பொலிவு தாண்டவமாட நின்றிருந்தாள்.

அவன் தன்னை ஒருமுறையாவது திரும்பிப்பார்த்துச் சிரிக்க மாட்டானா என்று ஏங்கினாள் மாலினி. அவனுடைய ஏக்கத்துக்குரிய ஒருத்தியாக விளங்கிய அவளே இன்று அவன் பார்வைக்கு ஏங்கி நிற்கும் நிலைக்காளாகியிருந்ததை எண்ணிக் குமைந்தாள். இந்நிலைக்குக் காரணம் அவனா?

மனித சமூகத்தில் கற்றவனை மதிக்காது காசுள்ளவனுக்கு மதிப்பளிக்கும் கலியுகம் முடியாதவரையில் பரந்தாமன் போன்றவர்களின் நிலையே தோன்றிக்கொண்டிருக்கும். அறிவும், பண்பும், ஆற்றலும், அழகும் பெற்றுவிட்ட அவன் ஏழைக் குடும்பத்தில் பிறந்துவிட்ட காரணத்தினால் மாலினி அவனைப் பிரிந்து சென்றாளா?

பொருளாதார ஏற்றத்தாழ்வு, தொழில் இல்லாத காரணத்தில் உண்டான அந்தஸ்து பேதம், குடும்ப வாழ்வுக்கு பாலமாக அமையும் பொருள் உறவு இத்தனையும் சேர்ந்து அவனை அவளிடமிருந்து பிரித்து வைத்தன என்றும் சொல்லமுடியாது. இத்தனைக்கும் மேலாக ஆசை கொண்ட அற்ப மனம் என்று ஒன்று அவளிடமிருந்துவிட்டதே உருவமற்ற அந்த உள்ளத்தில் உருக்குலையும் உறுதிகள் பல மலிந்துவிட்டனவே. இவைகளே அவனை அவள் ஏங்கித் தவிக்கும் ஓர் நிலையை உருவாக்கிவிட்டது.

இத்தனைக்கும் அவன் அவளை நினைத்து ஏங்கித் தவிக்கவில்லை, அப்படி ஒரு உள்ளம் அவனிடமிருந்திருந்தால் அவளைப் பார்த்தபோது ஏதாவது ஒரு மாற்றம், பதட்டம் அவனிடம் தோன்றியிருக்கவேண்டுமே. அவனோ—மலர்ச்சி குன்றாத முகத்தோடு, புன்னகை கீற்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்



ஒருவர்:- ஆயிரம் ரூபா சம்பளம் கிடைத்து வந்த அந்த வேலையை திடீரென்று விட்டுவிட்டாயே! அப்படியென்ன உனக்கு சுவீப் அடித்தது?

மற்றவர்:- ஆமடாப்பா பெரியசுவீப்தான் அடிச்சிருக்கு— கூட்டுறவுச் சங்கக் கடை மனேச்சர் வேலை கிடைச்சிருக்கு!

இதழ்களை நாவினால் தடவி ஈரப்பசை ஏற்றி பளபளக்கச் செய்தபடி அந்த யுவதியிடம் விடைபெற்றுச் சென்ற காட்சியை மாலினி பார்த்துக் கொண்டே மெய் மறந்து நின்றிருந்தாள்.

அவன் உண்மையில் அழகுக்கோ, அழகின் பெயரால் தோற்றுவிக்கப்படும் இனக் கவர்ச்சிக்கோ மதிப்பளிப்பனல்லன். அழகுடன் கூடிய அறிவையும், பண்பையும் கள்ளமில்லாத அன்பையும் வரவேற்பவன். அப்படிப்பட்ட ஒரு லட்சிய புருஷன் தன்னிலும்பார்க்க அழகுள்ள, சதைப் பிடிப்பான உடலமைப்புடைய ஒருத்தியின் அழகுக்குத் தன்னை அர்ப்பணித்திருப்பான், ஆசைப்பட்டிருப்பான் என்று அவளால் நம்பமுடியவில்லை. அவள் உடலைப் போன்று உள்ளமும் அழகுள்ளதாயிருந்திருக்கலாம் அதற்காக அவன் தன்னை வெறுத்து ஒதுங்கியிருப்பான் என மாலினியால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. அவனுடைய சந்திப்பு அவளுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்த அதே வேளையில், முன்னரில்லாத ஒருவித ஏக்கத் தவிப்பையும், முன்னைய உறவினால் உடலுள் கலந்துவிட்ட உணர்வுகளின் உருவமற்ற துடிப்பையும் உணரலானாள். அவள் உடலில் தளர்ந்துவிட்ட நரம்புகளினூடே அவளை அறியாத ஒரு சக்தி அவளை என்னவோ செய்தன,

* *

பரந்தாமன்! அவன் பேசுவது குறைவு—பேசினாலும் அந்தப் பேச்சு குழந்தையின் பொருள் புரியாத மழலை போன்று இன்பத்தையும், நகைச் சுவையும் கொண்டதாயிருக்கும். அவனுடைய சிரிப்பு ஒன்றே அவன் பிறரைத் தன்பால் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிக்காந்தமாக வைத்திருந்தான். அவன் விழிகள் மிகச் சிறியவை — அதில் அறிவின் ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கும். அந்தச் சிறிய விழிகளை ஒருமுறை பார்த்தால் அந்தப் பார்வையில் அப்படியே கட்டுண்டு அவன் இதயத்துள் சென்றுவிடுவது போன்ற உணர்வு தோன்றும். இன்பக்கிளர்ச்சியில்தான் புதிய உணர்வுகள் தோன்றிப் பிறக்கின்றனவென்றில்லை என்பதை அவனுடைய ஸ்பரிசம் அடிக்கடி வெவ்வேறு நிலைகளில் உணர்த்திக் காட்டும். ஆசையின் அடிப்படையில் பிறக்கும் வெறி உணர்வுகளல்ல அவன் உணர்வுகள். மனித உடலின் மகோன்னத சக்திகளின் பல்வேறு பிரிவுகளையும் உணர்ச்சிகளாக்கிட அவன் காட்டும் பொழுதெல்லாம் ஆசைதீராத குழந்தைபோல மீண்டும் மீண்டும் அவனிடமிருந்து அவற்றை எதிர்பார்த்துக் குதூகலிப்பாள் மாலினி. அப்படிப்பட்ட வேளைகளில் “நீங்கள் பொல்லாதவர்'' என்று மட்டுமே சொல்லுவாள்.

''அப்படி என்றால் இனி வேண்டாம்'' என்று அவன் கல்லுப்பிள்ளையார் மாதிரி இருப்பான்.

அவனைச் சமாதானப்படுத்தி மீண்டும் சம்மதிக்க வைப்பதற்குள் அவளுக்கு பலமுறை அழுகையே வந்துவிடும். அவள் உணர்ச்சிகளைத் தூண்டித் தூபம்போட்டுவிட்டு எதுவுமே நடவாததுபோல அவன் பேசாமலிருப்பதும் பின்பு அவள் கெஞ்சுவதும், கோபம்—வெறுப்பு—விருப்பு — கொஞ்சல் இப்படி நிமிடத்துக்குள்ளே அவனுடைய உணர்ச்சிகளின் நெளிவுகள் பலவிதமாக மாறும். ஆனாலும் அதில்தான் எத்தனை இன்பம். இவற்றையெல்லாம் நினைத்தபோது மாலினியின் விழிகள் குளமாக மாறி நீரைச் சொரிந்தன. அந்த நீர்த்திரையில் அவனுடைய சிரித்த முகம் தோன்றி ''வாவேன் மாலினி'' என அழைப்பது போன்றிருந்தது.

இரு கைகளையும் நீட்டியபடி அவன் அழைத்த அழகு சினிமாவில் வரும் கதாநாயகனை நினைவூட்டவே “என்ன படத்தில் இப்படி...?'' எனக் குறும்புடன் கேட்டாள் மாலினி.

“சினிமாவிலா? மாலி நீ...''
எனச் சிணுங்கியபடி நீட்டிய கைகளை எடுத்துவிட்டு மறுபுறம் திரும்பிக்கொண்டான்.

''கோபமா பரம்?'' என்று அவன் தோள்களைத் தழுவினாள்.



டைரக்டர்!- நாளைக்கு நீ நடிக்கவேண்டி காட்சி கோர்ட்சீன்.டைவோஸ் வழக்கு...

நடிகை: மன்னிக்கணும் சார். நாளைய கால் ஷீட்டைக் கான்சல் செய்துவிடுங்கள் நாளையதினம் எனது விவாகரத்து வழக்கு இருக்கு. அதுக்கு 'அட்டெண்ட்' பண்ணணும்.

‘‘எனக்கென்ன கோபம்? நான் நடிகனில்லை மாலி. என்னால் நடிக்கவும் முடியாது. உன்னுடன் கழிக்கும் பொழுது என் வாழ்வின் பொன்னான நேரங்கள். என்னைச் சூழ்ந்துள்ள எத்தனையோ கவலைகளை மறந்து உன்மடியில் சிரிக்கின்றேன். அளவுக்கதிகமாக நான் குழந்தைத்தனமாக நடந்துகொள்கின்றேன் அதனால் நீ தப்பாக நினைக்கின்றாய் போலும்.’’

‘‘இல்லைப் பரம் நான் அப்படி நினைக்கவில்லை. நீங்கள்...’’

‘‘இல்லை மாலி. நான் இப்படி நடந்துகொள்வது உனக்குப் பிடிக்கவில்லை என்பதை நீ உணர்த்திவிடுகின்றாய்’’ அவன் குரல் தழுதழுத்தது.

‘‘என்ன இது? நான் சும்மா பகிடிக்குக் கேட்டால்...’’ அவள் கரங்கள் மாலையாகி அவனை வளைத்துத் தழுவின.

‘‘ஐ ஆம் வெறி சொறி மாலி. இனிமேல் இப்படி கேட்கமாட்டேன்’’ என்று அவன் கூறும் பொழுதே விழிகளிலிருந்து நீர்த்துளிகள் உதிர்கின்றன.

அவன் விழிகளில் நீர்த்திவலைகளைப் பார்த்ததும் அவளுடைய விழிகளுள் நீர் மல்கி விட்டன. அவன் விழிகளைத் துடைத்தவாறே ‘‘நான் இப்ப என்ன சொல்லிவிட்டன். அப்படியென்றால் இனிமேல் உங்களோடு பகிடிக்காகக்கூட ஏதும் கதைக்க மாட்டன்’’ என்று அவன் மார்பில் முகம் புதைத்து விம்முகின்றாள்.

‘‘என்னுள்ளத்தில் பொங்கும் அன்பையும், ஆசையையும் அழித்து ஆழவைத்துவிட்டு பின்பு என்ன கொஞ்சலும் கெஞ்சலும்.’’

‘‘பரம்... நான்... இனி...’’ என்று சொல்லிவிட்டு அவன் மார்பில் தன் பட்டு இதழ்களால் கோலம் வரைகின்றாள். அவள் செயல்களால் அவனிடம் மாறுதல் ஏற்படுகின்றது.

‘‘மாலி’’

‘‘ம்’’

‘‘கோபமில்லையே மாலி. நான்...’’ என்று அவளை இறுக அணைத்துத் தழுவுகின்றான், அவன் குரலில் ஏற்பட்ட மாறுதல் போன்று அவள் உள்ளத்திலும், உடலிலும் மாறுதல்கள் தோன்றிவிட்டன போலும்.

‘‘பரம் நான் தங்களை வேண்டுமென்று அப்படி...’’ என்று வார்த்தைகளை முடிக்குமுன்பே அவன் செயல்கள் அவளைப் பேசவிடாது தடுத்தாட்கொண்டுவிட்டன. நீர் பெருகிய அவள் விழிகளைக்கூட அவன் இதழ்கள் ஸ்பரிகிறதன. அவள் மெய்மறந்து கிறங்கிக் கிடந்தாள்.

அதிக வேட்கையான அன்புகூட ஒருவகையான வெறி போலும். இல்லையெனில் சாதாரண உணர்வுடன் ஒன்றை வெறுத்து ஒதுக்கும் மனிதர்கள் மாறுபட்ட உணர்வுகளின் சங்கமத்தில் அவற்றை அமிர்தமாகவும், சொர்க்கமாகவும் பாவனைசெய்து நுகர்ந்து இன்புறுகின்றனரே. அன்பின் காரணமாக ஒருவர்க்கொருவர் தம்மை அர்ப்பணிப்பவர்கள் எந்நிலையிலும் தங்களை தாழ்த்துவதுமில்லை — உயர்த்துவதுமில்லை. ஆனால் போதையும், போகமும், மனிதனை மனிதவுணர்வுகளுக்கு அப்பால் சஞ்சரிக்கவைத்து விடுகின்றனவே. அன்புக்கும் — ஆசையின் பாற்பட்டவெறிக்கும் அடிப்படை ஒற்றுமை ஒன்றுதானா? இப்படிப்பலதடவைகள் மாலினி சிந்தித்திருக்கின்றாள். நினைக்கும் பொழுதே அருவருப்படையும் எத்தனையோ விடயங்களை பரந்தாமனுடன்சேர்ந்து இணையும் பொழுது எதுவிதமான அருவருப்புணர்ச்சியுமின்றி ...! அவற்றை நினைத்துப்பார்க்கும் பொழுது தன்னை மறந்தே சிரித்துவிடுவாள். இதையே ஒருநாள் பரந்தாமனிடம் கேட்டுவிட்டாள். அவள் கேட்டகேள்வியை எண்ணிச் சிரித்தான் பரந்தாமன்.

‘‘ஏன்சிரிக்கின்றீர்கள் பரம்’’?

‘‘மாலி—அன்பு கூட அளவுக்கதிகமாகி விட்டால் ஒருவிதமானவெறிதான். ஆழ்ந்து சிந்தித்தால் நாங்கள் பைத்தியங்கள் போலத்தான் நடந்துகொள்கிறோம் இல்லையா? ஆனால் குழந்தைகளைப்பார். அவர்கள் நல்லது — கெட்டது என்று எதையும் புரிந்துகொள்ளாது அருவருப்பானவற்றைக் கூடதொட்டளைந்து விளையாடுகின்றனவே. அப்படிப்பட்ட நிலைதான் நம்முடையதும். இதையே போதையிலும், மோகத்திலும் மனிதன் கையாள்கிறான். செயல்முறையில் ஒற்றுமையிருப்பினும் அடிப்படையில் வேற்றுமைகள் உண்டு. அன்பினால் ஏற்படும் உணர்வுச் சங்கமத்தில் பாதிப்புகள் இல்லை. விட்டுக்கொடுத்து தவிர்த்துக்கொள்கிறோம். ஆனால் மோகவெறியும், போதை உணர்வும்கொண்டவர்களின் சங்கமத்தில் ஒருவருடைய வேதனை மற்றவருக்கு இன்பமாக...’’



‘‘ஏது இன்று ஒரு நாளுமில்லாத திருநாளாய் ஆபீசிலிருந்து ‘ஷோட் லீவ்’ எடுத்துக் கொண்டு ஆனந்தமாக வீடு செல்கிறாய்?

‘‘ஒன்றுமில்லை'யடா! என் மனைவி இப்போது ஊரில் இல்லை—அதுதான்!

‘‘போதும் போதும் எனக்குப் புரிகின்றது பரம்’’ என்று அவள் கூறும்போது அவளை அள்ளி அணைத்து மடிமீது இழுத்து இருத்திட விபரம் தெரிந்த குழந்தை என்ன செய்யுமோ அப்படி எல்லாம்...

‘‘சீச்சீ... நீங்கள் ...’’ என்று எழுந்து ஓடினாள் மாலினி.

* *

நடிகை:- அத்தான், உங்களை இரண்டே இரண்டு எழுத்துக்களில் செல்லமாக அழைக்க விரும்புகிறேன்— எப்படி அழைக்கலாம் என்று சொல்லுங்கள்!

நடிகையின் கணவர்:- கூஜா என்று அழை கண்ணே!

“அம்மா பிச்சை — அம்மா பிச்சை “என்று தகரக்குவளை பலமுறை கிலுக்கிய ஒரு பிச்சைக்காரனின் குரல் அவளைச் சுய உணர்வடையச்செய்யவே விழிகளைத் துடைத்துக் கொண்டு கைகளிலிருந்த சில்லறையில் ஒன்றை அந்தத் தகரக் குவளையில் போட்டுவிட்டு, இதயத்தில் ஏக்கப்பெருமூச்சைத் தேக்கியவாறு நடந்தாள் மாலினி.

அவளுக்குத் திருமணமான பின்புதான் பரந்தாமன் கூறிய கருத்துக்கள் அனுபவபூர்வமாக அவளுக்குக் கிடைத்தன. புதுமையில் அவள் இஷ்டப்படி வளைந்துகொடுத்த கணவன் நாளாக நாளாக தன்னை ஒரு போகப் பொருளாகவே பாவிக்கின்றான் என்பதை உணர்ந்தாள். பரந்தாமனுடைய அன்புச்செயல்களுக்கும் அவள் கணவனுடைய மோகவெறிக்கும் வித்தியாசங்கள் பல இருப்பதை எண்ணிக் கலங்க ஆரம்பித்த அதே வேளையில் அவள் இதயத்தில் பரந்தாமனுடைய நிழல் வளருகின்றது.

வறுமையான குடும்பத்தவன் — வாழவசதியற்றுதொழிலின்றி இருக்கின்றான் என நினைத்து அவன் உண்மை அன்புக்குச்செய்த துரோகத்தை எண்ணிக் கலங்கினாள். துடித்தாள். உத்தியோகம் புருஷ லட்சணம் என்று எண்ணி உத்தியோகத்திலிருந்த ஒருவனை பெற்றோரின் விருப்பம் என்று திருமணம் செய்து அதுவே இன்பம் எனக் கருதியவளுக்கும் நாளடைவில் அதுவே பெரும் வேதனையாகத்தோன்றிற்று. அவளுடைய கற்பனைகளெல்லாம் வாடிய பயிராகி உண்மையான அன்புக்கும், அதன் இன்ப விளைவுகளுக்கும் எண்ணி ஏங்கின. கண்களை இழந்த பின் சூரிய வணக்கத்தைப்பற்றி நினைத்துக் கவலைப்படுவதில் பிரயோசனம் என்ன என்று ஏக்கப்பெருமூச்சுவிட்டாள். அதே வேளையில் அவனோடு கதைத்துக்கொண்டு நின்ற அந்த அழகி கொடுத்துவைத்தவள்தான் என எண்ணி பெருமைப்பட்டாள்.

அவனோடு கழிந்த களிப்பான நாட்களை எண்ணிப்பார்ப்பதில் அவளடைந்த மகிழ்ச்சியும், இன்பமும் பெரும் நிழல் போன்று வளர்ந்துகொண்டே போயிற்று. அந்த நினைவே இன்பமானால் அவனுடன் வாழ்ந்து... நினைவின் முடிவில் இருதுளி கண்ணீரை விடுவவதைத் தவிர வேறு வழி அவளுக்குத் தெரியவில்லை.

* *

வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவங்கள் பெரும்பாலும் அழையாதவிருந்தாளிகளாகவே, நாம்வேண்டாதபோதும் வலிந்து வந்துவிடுகின்றன. இதே நிலைதான் மாலினிக்கும் அன்று ஏற்பட்டது.

மனச் சாந்திக்காக சினிமாவுக்குச் சென்றாள். காட்சி தொடங்கிய பின்புதான் இருளில் சென்று அமர்ந்தாள். அவள் இருந்த ஆசனத்துக்கு முன்பு இருந்தவனுடைய குரல் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. நாளிலும் பொழுதிலும் அவள் இதயத்துள் ஒலிக்கும் அதே பரந்தாமனுடைய குரல்தான். அவனுக்கு அருகில் அந்த அழகி அமர்ந்திருந்தாள். அவள் இதயத்தில் கணநேர இடிமுழக்கம் சமாளித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். திரையில் விழும் ஒளியின் பிரதிபலிப்பில் அவர்கள் உருவம் தெளிவாகத் தெரிந்தன.

“பரம். நான் கேட்ட கேள்வியை மறந்துவிட்டீர்களா?” அவனருகிலிருந்த அழகியே கேட்டாள்.

“பதில். ஒரே பதில் அன்றே சொல்லிவிட்டேனே ரஞ்சி.”

“உங்கள் நிலையை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகின்றது. நீங்கள் தொழிலின்றி, பொருள் வசதியின்றி இருந்தீர்கள் என்பதற்காக உங்களையே ஏமாற்றி துரோகம் செய்தவளை நினைத்துக் கொண்டு உங்கள் வாழ்வையே நரகமாக்குகின்றீர்களே பரம்,”

“ரஞ்சி! உங்கள் நல்ல மனதைப் புரிந்துகொண்டவன் என்பதால் கூறுகின்றேன். திருமணம் சொர்க்கத்தில் நிட்சயம் செய்யப்படுகின்றது என்றுதான் எல்லாரும் கூறுகின்றார்கள். அது அன்பினால் பிணைந்து பொருள் உறவை வெறுத்து இணைபவர்களுக்கேயன்றி பெரும்பாலும் பொருள் உறவால் நிட்சயம் செய்யப்படும் திருமணத்துக்குப் பொருந்தாது. என்னதான் மனிதர்கள் ‘விதி விதி’ என்று அலட்டினாலும் முடிவில் திருமணத்தை நிட்சயம் செய்யும் விதியாக இருப்பது பொருள்தான். பொருள் உறவு காரணமாக, அவள் மனதில் தோன்றிய ஆசைக்கு வழிகாட்டி பெற்றோர்—பெற்றோரின் வழியில் அவள் சென்றுவிட்டாள். அவள் ஏற்படுத்திக்கொண்ட திருமண உறவுகூட பொருள் காரணமாக ஏற்படுத்திக் கொண்ட அவசர முடிவுதான். என்று என்னை அவள் பிரிந்தாளோ அன்றே அவள் செத்துவிட்டவள். ஆனால் என்னோடு வாழ்ந்த மாலினியை என்னால் மறக்கமுடியாது ரஞ்சி. நான் அவளோடு வாழ்கிறேன் ரஞ்சி. அவள் என்றால்— அவள் உடலல்ல ரஞ்சி. அவள் ஆத்மாவுடன் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்” என்று அவன் கூறிக்கொண்டிருக்கையில்



பின்னாலிருந்த மாலினி அழுது கொண்டேயிருந்தாள்.

“பரம் அப்படியாயின் நீங்கள் இனி...”

“ரஞ்சி. என்னைப் பொறுத்த வரை ஒருத்தியுடன் வாழ்கிறேன். ஒருத்தியின் உடலோடு வாழ்ந்தால் தான் வாழ்க்கையா? ஒருத்தியின் நினைவில் அமிழ்ந்து வாழ்பவன் கூட சம்சாரிதான் ரஞ்சி.”

“நல்ல வினோதமான மனிதர் நீங்கள். பரம் இன்று நீங்கள் அவள் கணவனைவிடப் பெரிய பதவியில் இருக்கின்றீர்கள். ஆடம்பரமாக வாழ்கின்றீர்கள். உங்களை அவள் எங்காவது பார்க்க நேர்ந்தால்...?”

“ரஞ்சி! ஆடம்பரமாக நான் வாழ்கின்றேன் என்று மட்டும் கூறினீரே! ஏன் உயிருக்கு உயிரான ஒரு சினேகிதியின் அன்பில் கவலைகளை மறந்து வாழ்கிறேன் என்பதைக் கூற மறந்துவிட்டீர்கள்.”

“அப்படி நான் நினைக்கவில்லை பரம். நான் கூட உங்கள் நினைவில் அமிழ்ந்துதான் வாழ்கிறேன். ஒருவனோடு சேர்ந்து வாழ்ந்தால்தான் மனைவியா? ஒருவன் நினைவை மனதிலும், இன்னொருவனுக்கு உடலையும் கொடுத்து வாழ்வதைவிட இதுமேலல்லவா?”

“ரஞ்சி! உன்னைப் போலவே அவளும் என்னை நன்கு புரிந்து கொண்டவள். எப்படி, எந்நிலையில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு நிமிடமும் என்னை நினைத்தே ஏங்கிக்கொண்டிருப்பாள். ஆனால் நான் இறந்துவிட்ட அவளைத்தான் நினைக்கிறேனே தவிர ஒருவனுடன் மனைவியாய் வாழும் மாலினியை அல்ல” என்று கூறி சிரித்தான். அவனோடு சேர்ந்து ரஞ்சியும் சிரித்தாள். அந்தச் சிரிப்பு ஒவ்வொரு கணமும் ஆயிரம் சர்ப்பங்களாக உருவெடுத்து பின்னாலிருந்த மாலினியைத் தாக்குவது போன்றிருக்கவே எழுந்து வெளியே வந்தாள். வெளியில் புறப்பட்ட நேரத்தில் அவள் முடிவோடுதான் புறப்பட்டிருந்தாள்.

அவள் செவிகளில் இருவருடைய உரையாடலும் சேர்ந்து ஒலித்தன. “பரம் அவள் சாதாரண பெண். ஆசையின் வேகத்தில் உங்களை விட்டு ஓடிப் போனாள். நான் சகல வசதிகளோடும் வாழ்பவள். அப்படிச் செய்யமாட்டன்’ என்று கூறிய வார்த்தைகள் அவளை என்னவோ செய்தன.

“பரம் நான் பேதை. உலக மாயைக்கு ஆட்பட்டு உங்களுக்குத் துரோகம் செய்தேன். சட்டமும் சம்பிரதாயமும் என்னை —இல்லை— இந்த உடலை ஒருத்தனுக்கு தாரை வார்த்ததேயன்றி என் உள்ளத்தில் உங்கள் நினைவைத் தவிர வேறு எதுவும் இல்லை. இந்தத் தசைப் பிண்டம் செத்துவிட்டதாகத் தானே நீங்கள் நினைத்து இருக்கின்றீர்கள். உங்கள் நினைவுப்படியே நான் உங்களோடு வந்து விடுகின்றேன். நான் என்பது இந்த உடல் அல்ல பரம். நீங்கள் நினைக்கும் அந்த உருவற்ற ஆத்மாவாகவே உங்களோடு வாழ வருகின்றேன் பரம். சட்டத்தாலும், சம்பிரதாயத்தாலும் உடல்களைத்தான் இணைக்கமுடியுமே தவிர உள்ளங்களை அல்ல... என்று அழுது புலம்பியவாறே ஒரு திருப்பத்தில் திரும்பிய போது எதிரே வேகமாக வந்த ஒரு லொறி அவளை...!

[யாவும் கற்பனை]

சிறைச்சாலை இனிக்கும்!

(4) அரச மாளிகை நோக்கி...

இரண்டாம் இரவு வவுனியா பொலீஸ் நிலையத்தில் உருண்டோடிற்று.

ஜூன் 12ஆம் திகதி பகல் புகை வண்டி மூலம் வவுனியாவில் இருந்து கொழும்புக்கு நான் அழைத்துச் செல்லப் பட்டேன்.

ராஜபக்ஷ என்ற சிங்கள பொலீஸ் இன்ஸ்பெக்டர் கைத்துப்பாக்கியோடு என் பக்கத்தில் பயணம் முடியும்வரை காவல் இருந்தார்.

சிவில் உடையில் மூன்று பொலீஸ்காரர்கள் கூடவே சேவையில் ஈடுபட்டிருந்தார்கள்.

என்னோடு பயணம் செய்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ கரடுமுரடானவர். வவுனியாவில் இரண்டாவது குடியரசு தின பகிஷ்கரிப்பின்போது தமிழர் ஏற்றிய கறுப்புக்கொடியை ஆவேசத்தோடு கிழித்து வீசி அட்டகாசம் பண்ணியவர்.

சிங்கள இனவெறி அவர் மூக்கு நுனியில் உட்கார்ந்துகொண்டிருந்தது.

வவுனியா பொலீஸ் நிலையத்தில் இருந்து கொழும்பு பயணத்துக்காக நான் அழைத்துவரப்பட்டபோது வவுனியா புகைவண்டி நிலையத்தில் ஏராளமான தமிழர்கள் திரண்டிருந்தார்கள்.

கூட்டத்தில் இருந்து என்னை நோக்கி ஆசையோடு பேச ஓடிவந்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களை "நில்லும்! அவரோடு நீர் பேசக் கூடாது!" என்று கூச்சலிட்டு தடுத்து நிறுத்தினார் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ.

"தமிழ் ஈழம் வெல்க!" என்று புகை வண்டி நிலையத்தில் திரண்டிருந்த தமிழர் கூட்டம் ஓங்கி முழங்கிற்று.

நான் கொழும்பு பயணமானேன்.

சிங்களவர் தலைநகரான கொழும்பை நோக்கி ஓடிக்கொண்டிருந்த புகைவண்டியில் ஒரு மூலையில் இருந்தபடி சிந்தனையில் ஆழ்ந்தேன் நான்.

இத்தனை நாளும் எனக்கு இது புகை வண்டி. இன்று எனக்கு இது பகை வண்டி.

என் போன்றவர்களை அடிமைகளாய் ஏற்றிச் செல்லும் பாவத்தைப் புரிவதால்தான் போலும் விடுதலைப் போராட்ட காலங்களில் புகைவண்டிகள் அடிக்கடி கவிழ்ந்து விழுகின்றன.

பாவம் புரிகின்ற மனிதர்கள் மட்டுமல்ல—பாவத்துக்கு உடந்தையாக இருக்கின்ற புகைவண்டி போன்ற சடப் பொருட்களும் பாவத்தின் பலனை அனுபவித்தே தீரவேண்டும்.

பகல் 2 மணி இருக்கும் கொழும்பு சேர்ந்த நான் கொள்ளுப்பிட்டியில் உள்ள அரசியல் புலன் விசாரணை தலைமை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டேன்.

எனக்கு முன்பே தெரிந்த இளைஞர் ஒருவர் அங்கே நின்றிருந்தார். அவர்தான் என் அருமை நண்பர் வண்ணை ஆனந்தன்.

என்னைப்போலவே அவரையும் அழைத்து வந்திருக்கிறார்கள் என்பது எனக்குத்தெரிந்துவிட்டது.

சிறிது நேரத்தின் பின்னர் அரசியல் புலன் விசாரணை பகுதி உதவி பொலிஸ் அதிபரால் நான் விசாரிக்கப் பட்டேன்.

ஆயிரம் குழப்பங்கள் உண்டாக்கும் ஆயிரம் கேள்விகள் போடப்பட்டன.

இரவில் தாமதித்து வீடு வரும் கணவனைக் கூட மனைவி இப்படி விசாரிக்க மாட்டாள்.

இருதயமில்லாத மனிதர்கள் அர்த்தமில்லாத விதத்தில் காரணமில்லாத சந்தேகங்களோடு நியாயமில்லாத விசாரணையை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

"நல்லூர் கிராமசபைத் தலைவர் கைத்துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கிறார். இச்சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட காரின் சாரதி சுட்டுக்கொலை செய்யப்பட்டிருக்கிறார். எறிகுண்டுகள் தலைவர்கள் சிலர்மீது வீசப்பட்டிருக்கின்றன- வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசாவைக் கொலை செய்ய முயற்சிமேற்கொள்ளப்பட்டிருக்கிறது...'' என்று அடுக்கிக்கொண்டே போன உதவி பொலிஸ் அதிபர் திடீரென்று நிறுத்தி "நீர் இதற்கு என்ன சொல்கிறீர்?'' என்று கேட்டார்.

நான் இதற்கு என்ன சொல்வது?

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் புதுத் திசையில் நடை தொடங்கிய நாட்கள் அவை.

தமிழினத்துக்கு அள்ளி வைக்கும் துரோகிகளுக்கு கொள்ளி வைக்கும் எண்ணம் தீவிரவாதிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

யாழ்நகரில் மூலைக்கு மூலை வெடிகுண்டுகள் முழங்குவதாக மக்கள் பேசிக்கொண்டார்கள்.

இத்தனைக்கும் நான்தான் மொத்தக் காரணமா?

பொலிஸ் உதவி அதிபர் என்ன பேசுகிறார் என்பது எனக்குப் புரியவில்லை.

"இந்தச் சம்பவங்களில் உமக்குச் சம்பந்தம் இருக்கிறதோ என்னவோ— அதைப் பின்பு கவனிக்கலாம் — இச்சம்பவங்கள் நிகழ மக்களை நீர் உமது வார்த்தைகளால் தூண்டி இருக்கிறீர்!''

உதவி பொலிஸ் அதிபர் இப்படி உறுமியபோது நான் உலகத்துக்கு வந்தேன்.

எனக்குச் சிரிப்பாக இருந்தது.

ஒரு விடுதலைஇயக்கத்துக்குத் தூண்டுதல் தேவைதானா?

அம்மை நோய் ஏற்பட்டால் உடலெல்லாம் கொப்பளங்கள் போடும். கொப்பளங்களை யாரும் அம்மை நோயாளியின் உடலில் ஒட்டுவதில்லை.

அடிமை நோய் வந்தால் சமுதாயத்தில் கொந்தளிப்புகள் எழும். கொந்தளிப்புகளை யாரும் அடிமைச் சமுதாயத்தில் ஏற்படுத்துவதில்லை, உதவி பொலீஸ் அதிபரின் முன்னால் வாய்திறந்து உரக்கச் சத்தம் போட்டுச்சிரிக்க வேண்டும்போல் தோன்றிற்று.

நான் தூண்டிவிடுகிறேன் என்று சொல்லும்படி உதவி பொலீஸ் அதிபரை யாராவது தூண்டி விட்டிருப்பார்களோ?

அரசியல்வாதிகள் நிர்வாகத்தில் அளவு மீறித் தலையிடுகின்ற காலம் இது.

அரசாங்க உயர் உத்தியோகத்தன் ஒருவனின் நியாயமான கருத்தைவிட ஆளுங் கட்சிக்காரன் ஒருவனின் அநியாயமான பெட்டிசத்துக்கு அதிக மரியாதை தரப்படும் தேசத்தில் நாம் சீவிக்கிறோம்.

பெரிய குற்றம் எதுவும் செய்யாத என்னை உதவி பொலீஸ் அதிபர் இப்படி ஏன் பெரிய அளவில் விசாரிக்கிறார் என்று புரியாமல் பெருமூச்செறிந்தேன்.

காலம் உருண்டோடிற்று.

நான்கு மணிநேர விசாரணையின் பின் புண்ணியவாளர்கள் என்னை — நல்ல காலம் ஒரு புறத்தே உட்காரவிட்டார்கள்.

"ஆறுதலாக நாம் பின்பு சந்திப்போம் — அதுவரை நீங்கள் அரசமாளிகையில் தங்கலாம்'' என்று கூறிக்கொண்டே உதவி பொலீஸ் அதிபர் புறப்பட்டார்.

அந்தி மாறி இரவு ஆகிக்கொண்டிருந்தது.

எங்கும் காரிருள்.

அழகான ஒரு வெள்ளைக் காரில் அருமை நண்பர் வண்ணை ஆனந்தனும் நானும் ஏற்றப்பட்டோம்.

எங்கோ அவரையும் விசாரித்து முடித்து என்னோடு கொணர்ந்து விட்டிருந்தார்கள்.

வெள்ளை ரதம் புறப்பட்டது.

பாட்டி கதைகளில் வருவதுபோல் நாங்கள் திடீரென்று இராசாக்கள் ஆகிவிட்டோமா?

அரசமாளிகைக்கு எங்களை அனுப்புவதாகச் சொன்னாரே உதவி பொலீஸ் அதிபர்—அரச மாளிகை எங்கே?

(தொடரும்)

காசி ஆனந்தன்

நீதிக் கதை

பலசாலி யார்?

கச்சான் காற்றுக்கும்—கொண்டல் காற்றுக்கும் ஒரு நாள் பெரிய வாக்கு வாதம் ஏற்பட்டது.

“நாம் இருவரில் யார் பலசாலி?” என்பதுதான் அந்த வாதம். நீண்ட தர்க்கத்தின் பின் இரண்டு காற்றுக்களும் ஒரு முடிவிற்கு வந்தன.

குரங்கொன்றை மரத்திலிருந்து யார் நிலத்தில் வீழ்த்துகிறார்களோ அவர்தான் நம்மிருவரில் பலசாலி — இப்படி இரண்டும் சேர்ந்து முடிவு செய்த பின் ஒரு நாள் போட்டி நடைபெற்றது.

கச்சான் காற்றுக்கு—தான் ஜெயித்து விட்டதாக ஒரு நினைப்பு, அந்த நினைவில் தலைக்கனத்தோடு — தலைகீழாகச் சுழன்று—சுழன்று பேய் போல வீசியது. குரங்கு நிலத்தில் விழவேயில்லை. நன்றாக மரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அசையாமல் இருந்தது. தலைக்கனம் கொண்ட கச்சான் களைத்து—அலுத்து ஓய்ந்தது.

அதற்கடுத்து கொண்டல் போட்டியில் கலந்து கொண்டது.

கொண்டல் காற்று மெதுவாக வீச வீச—குரங்கிற்கு நித்திரைத் தூக்கம் வந்து விட்டது. மரத்திலிருந்தபடியே தூங்க ஆரம்பித்தது இதைக் கவனித்த கொண்டல் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள—கொஞ்சம் வேகமாக வீசி மரத்தை ஒரு உலுப்பு உலுப்பியது. இதைச் சற்றும் எதிர்பார்த்திராத குரங்கு ‘தொப்’பென்று நிலத்திலே வீழ்ந்தது.

கச்சானுக்கு ஆத்திரமாத்திரமாக வந்தது—“நீ உனது பலத்தால் குரங்கை விழுத்தவில்லை. தந்திரத்தால்தான் விழுத்தியிருக்கிறாய். இதிலிருந்து நீ தான் பலசாலி என்று முடிவு கட்ட முடியாது!” என்று தொண்டை கிழியக்கத்தியது.

இதைக் கேட்ட கொண்டல் “ஆம் நண்பா புத்திமான் பலவான்” என்று சொல்லிச் சிரித்தது.

அதன் பிறகு கச்சான் காற்றை அங்கே காணவேயில்லை.

—செ. குணரத்தினம்,

‘வாழ்க’ ஆனந்தன்!

சிறைச்சாலையில் மூன்று ஆண்டுகள் தமிழினத்துக்காக தவமிருந்துவிட்டு வந்திருக்கும் வண்ணை ஆனந்தன் மேடைகளில் நகைச்சுவையுடன் பேசுவதில் வல்லவர். அவரது பேச்சில் அடிக்கடி ‘பச்சையாக’ எனும் சொல் வந்துகொண்டிருக்கும். தொலைபேசியில் பேசும் போது வண்ணையின் வாயிலிருந்து முதன் முதலில் வரும் சொல் ‘வாழ்க’!

நினைவில் வைக்கவேண்டிய வைத்தியக் குறிப்புகள்

- சிலருக்கு தலையில் பொடுகு உண்டு. பொடுகு உள்ளவர்கள் தேங்காயெண்ணெயில் கற்பூரத்தை தூளாக்கி போட்டு தலையில் தேய்த்து வாருங்கள் பொடுகு போய்விடும்.
- அடிக்கடி தலைவலி அல்லது சோர்வு ஏற்பட்டால் சோடியம் சத்து குறைந்து விட்டது என்று அர்த்தம். இச் சத்தை கிழங்கு, கீரை, வெள்ளரிக்காய், இளநீர் ஆகியவைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
- நீரிழிவு நோயாளிகள் தினமும் சாப்பிட வேண்டிய பழம் பப்பாளிப்பழமாகும் இப்பழத்தை அடிக்கடி சாப்பிடுவதால் நீரிழிவு நோய் சிலருக்கு குணமாகிவிடும்.
- சிலருக்கு புருவங்கள் உதிர்வதுண்டு. இப்படிப் புருவம் உதிர்வது ஒரு நோயாகும் இதற்கு தினசரி காலை பசுவெண்ணெயும் இரவில் பசுப்பாலும் சாப்பிட வேண்டும்.
- வயிற்றில் இரைச்சலுள்ளவர்கள் கொஞ்சம் வெந்தயத்தை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு மென்று மோர் சாப்பிடவேண்டும். வயிற்றிலுள்ள இரைச்சல் குணமாகிவிடும். வெந்தயத்தில் இரும்புச் சத்து ஏராளமாக இருக்கிறது.
- சிலருக்கு இரத்தக் கோளாறுகளினால் உடல் முழுவதும் தேமல் போன்ற சரும நோய்கள் வரும். இப்படி ஏற்படும் சரும நோய்களைக் குணமாக்க நன்னாரி வேரை இடித்து சூரணமாக்கி அதனை தினசரி இரண்டு வேளை கால் தேக்கரண்டி அளவு தேனில் குழைத்து சாப்பிட்டால்போதும் சூடு மாறும் இரத்தம் சுத்தமாகும் தேமல் போகும்.

—திரட்டி அனுப்பியவர்,
செல்வி சரோஜினிதேவி அம்பலவாணர்,
பதுளை.

1+1=16

திருமலை-இராசரத்தினம்

இங்கிலாந்து விமான சேவையினரின் இறங்குதுறை மிக்கமிடுக்குடனும் மிகப் பொலிவுடனும் துலங்கிக் கொண்டிருந்தது. வழக்கம் போல பிரயாணிகளின் சலசலப்பிற்கும் அங்கே குறைவில்லை.

இங்கிலாந்திற்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட விமானசேவை மிக ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளை, அங்கிருந்து என் தாயகமான இலங்கை திரும்பும் பொருட்டு அவ்விமானத் தளத்தின் தங்கும் அறையினுள் அமர்ந்திருந்தேன் மேற்குறிப்பிட்ட விமானத்தின் வரவுக்காக. அவ்வறையினுள் அப்போது என்னைத்தவிர யாருமேயில்லை.

மேற்குறிப்பிட்ட விமானம் சேவையிலீடுபட இன்னும் சரியாக இரண்டுமணி நேர அவகாசம் உண்டு என்பதும் அதற்கு ஒரு காரணமாக அமையலாம்!

சிறிதுநேரம் அமைதியாக இருக்கவேண்டும் என்று மனம் விரும்பிய காரணத்தால் ஜன சந்தடி மிக்கவெளிப்புறம்செல்லாமல் அந்த அறைக்குள்ளேயே தனியனாக முடங்கிக் கிடந்தேன். உடம்பை ஒரு முறை ஆசுவாசப் படுத்திக் கொள்ள எண்ணி சிகரெட் கேசிலிருந்து ஒரு சிகரெட்டையுருவிப்பற்றவைத்து புகையை உறிஞ்சியிழுத்துச் சுவைபார்த்துக்கொண்டே கையிலிருந்த ஒரு தமிழ் பத்திரிகையைப் புரட்டினேன்.

அந்தப்பத்திரிகையின்பெயர் 'சுதந்திரன்'—ஈழநாட்டிலிருந்து (என் தாயகம்) அங்கே வாழும் தமிழ்பேசும் மக்களுக்காக வெளியாகும் பத்திரிகை அது. தம் இன உரிமைக்காக சிங்கள ஏகாதிபத்தியத்துடன் போராடி வரும் என் தாயக தமிழ் மக்களின் சார்பாக வெளிவரும் ஒரேயொரு தமிழ் ஏடான படியினால் அதற்கு... 'இலங்கை தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்' — என்ற சிறப்புப்பெயர் நின்று ...... நிலைத்து...நீடித்துவிட்டது.

என்வேண்டுகோளிற்கிணங்க இலங்கையிலிருக்கும் எனது நண்பனொருவன் இங்கிலாந்தில் தொழில் பார்க்கும் எனக்கு வாரம் தவறாது அந்த வாராந்தரியை அனுப்பிக் கொண்டிருந்தான்.

பரவலாகப் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்த என் கண்கள் ஒரு கணம் செயலிழந்துவிட்டன.

காரணம்...

பின்னிருந்து 'எக்ஸ் கியூஸ்மீ' —என்று யாரோ மதுரமான குரலில் அழைத்து என் புலனை நிறுத்தியதே!

குரலுக்குரியவர் ஒரு பெண் என்பதைதெளிவாக உணர்ந்து கொண்ட நான் தலையைப் பின்புறம் சர்வ சாதாரணமாகத் திருப்பினேன். அங்கே...

ஒரு அழகி செதுக்கிவைத்த சிற்பம் போன்று நின்றுகொண்டிருந்தாள் சிரிப்புடன்!

ஆயனர் கைவேலைப்பாட்டில் உருவாக்கப்பட்ட அவ்வஜந்தா ஓவியம் நின்றிருந்த தோரணை இங்கிலாந்தின் பண்பாட்டிற்கே மாறுபட்டதாக இருந்தது. தலையை ஒழுங்காக வாரியெடுத்துச் சடையிட்டிருந்தாள். வட்டவடிவமான முகம் பூரணை நிலவின் புதுப் பொலிவை நினையூட்டியது. சிவப்புநிறச் சட்டையும் அதற்கெடுப்பான அதே நிறத்தில் ஒஒ சாறியும் அவள் அழகை மேலும் மிகைப்படுத்திக் கொண்டிருந்தன.

பண்டைய மன்னர்களின் பழம்பெரும் இலச்சினைகள் அவள் பருவத்திலே உவமையிட, இமைகொட்டாது அவ்வழகை ரசித்த எனக்கு...

"எக்ஸ் கியூஸ் மீ"

இரண்டாம் முறையும் அவளே குரல் தந்தாள்.

"ஓ! ஐ ஆம் சாரி. வட் யு வோண்ட் மிஸ்?" — ஆங்கிலத்திலேயே பதிலளித்த எனக்கு அவள் அடுத்து வினவியது பெரும் வியப்பையளித்தது.

"நீங்கள் ஒரு தமிழரா?"

மகர யாழின் ஓசைகூட அவள் குரல் கேட்டு ஒடுங்கி விடும்; அவ்வளவு தெவிட்டாத தித்திப்பு.

"ஆமாம்!— அதையெப்படிக் கண்டுகொண்டீர்கள்?" என் குரலில் வியப்பு மேலிட்டது. மேலும், அவள் பேச்சிற்கு நானும் தமிழிலேயே பதிலளித்தேன்.

"இது ஒன்றும் கடினமான காரியமல்லவே! காரணம், நீங்கள் கையில் வைத்துப்படிப்பது ஒரு தமிழ் பத்திரிகை. அதனால் நீங்கள் ஒரு தமிழரென்பது என் யூகம். இங்கிலாந்தில் வைத்து ஒருவர்தமிழ் பத்திரிகை படித்தாரானால் அவர் நிச்சயம் ஆங்கிலேயராக அல்லது பிற இனத்தவராக இருக்கமாட்டார் என்பது என் திடமான முடிவு. சரிதானே?"

அவளும் ஒரு தமிழ்ப் பெண்தான் என்பதைப் புரிந்து கொண்ட நான் 'ஆமாம், உங்கள்...?' வார்த்தையை முடிக்கு முன்பே "என் பெயர் மிஸ், லலிதா" பட்டெனப் பதில் கூறினாள்.

"வட் ஏ ஸ்வீற் நேம்!" — என் அனுமதியில்லாமலேயே உதடுகள் இப்படி ஒருமுறை திறந்து மூடின. 'மிஸ்'தானே? —'மிஸஸ்' அல்லவே? இதை நினைத்து உவகைகொண்ட என் உள்ளம் பலமான ஒரு நெட்டுயிர்ப்பை வெளிப்படுத்தியது.

"என் பெயர் இராமநாதன்; தாயகம் இலங்கை, ஊர் திருக்கோணமலை." என்னை நானும் அறிமுகம்செய்துகொண்டேன் பின்...



முதலாமவர்:- என்னடாப்பா, நீ என்னோடை ‘கிளாஸ் மேற்’ என்கிறாய்—எனக்கு உன்னை நினைவே இல்லையே! எங்க கிளாசில எல்லா மாணவர்களுக்கும் காதல் கடிதம் எழுதுவாளே கமலா—அவளை உனக்கு நினைவிருக்கா சொல்லு பார்ப்பம்!

இரண்டாமவர்:- மூடடா வாவை! அந்தக் கமலா தான் இப்போது கமலநாதனாகி உன் முன்னால் நிற்கிறேன்!

“அடடே, நின்றுகொண்டிருக்கிறீர்களே? இப்படி உட்காருங்கள்”—இதை இப்போது தான் உணர்ந்தவன்போல் என் அருகே இருந்த இடத்தைச் சுட்டிக்காட்டினேன்;

“நன்றி” நாசூக்காகக் கூறியவள் என் அருகே மிக நெருங்கி உட்கார்ந்துகொண்டாள். இது நான் எதிர்பார்த்ததுதான். நெருங்கி உட்கார்ந்ததின் விளைவாக, அவள் என்னுடன் முட்டிமோதியதனாலுண்டான ஸ்பரிச உணர்ச்சி என் ஆண்மையை ஒரு கணம் நிலை குலையச்செய்துவிட்டது. ஆயிரம் வோல்ட்ஸ் மின்சாரம் உடலிலே பாய்ந்ததைப் போன்றதொரு பரபரப்பு.

‘பெண்களின் ஸ்பரிசத்திற்கு இத்துணை சக்தியா?’ என்னிடம் நானே ஒருமுறை கேட்டுக்கொண்டேன்.

அவளும் உணர்ச்சியின் உச்சப்பிடியில் இருந்தாள். அவளின் சிவந்த மேனிமேல் படர்ந்து நின்ற செவ்வரிக் கோடுகள் ஆடையற்ற பல பகுதிகளில் அழகு நடம் செய்தன. தன் மேனியில் படர்ந்து நின்ற இந்த முத்திரைக்கு மூடுதிரை போடுவது போல தன் முகபாவ உணர்ச்சியை மறைக்க கையிலிருந்த ஒரு சஞ்சிகையைப் பிரித்துப் பாசாங்கு செய்தாள் அந்தப் பாவை.

ஈழத் தமிழர் குரலான ‘சுதந்திரன்’ என் கையிலிருக்க, இங்கிலாந்து தமிழர் ஏடான ‘லண்டன் முரசு’ அவள் கையிலிருந்தது. உள்ள உணர்ச்சியானது ஊனை அசைவிப்பது போல எமது கைகளிலிருந்த ஏடுகள் நாம் ‘தமிழர் சுதந்திரம்’ மீது கொண்டுள்ள பக்தியைப் பலப்படுத்தின.

“மிஸ் லலிதா!—நான் இங்கே வைத்தியப் படிப்புக்காக வந்தவன், இரண்டு வருடகாலம் மேலதிகமாகத் தொழிலும் பார்த்துவிட்டு இலங்கை அரசாங்கத்தின் கண்டிப்பின் பேரில் தாயகத்தில் தொழில் நடத்தச் செல்கிறேன். ஆமாம் நீ......?”

முதன் முறையாக அவளின் பெயரைச் சொல்லியழைத்த நான் ஒருமையிலேயே என் பேச்சை முடித்தேன். இதை அவளும் விரும்பியதுபோல இருந்த நெருக்கத்தின் இறுக்கத்தைப் பலப்படுத்தியவாறு “நான் உலகத் தமிழர் மகா நாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்து வந்தேன். இங்கு நடைபெற்று முடிந்த உலகத் தமிழர் மகா நாட்டில் ஈழத்தின் சார்பில் கலந்து கொண்டு விட்டு யாழ்ப்பாணம் திரும்பக் காத்திருக்கிறேன்.”

என்று மிகவும்கலகலப்பாகப் பதிலளித்தாள்.

“மிக்க மகிழ்ச்சி! ஆமாம், என்னால் உங்களுக்கு ஏதாவது உதவியாகவேண்டுமா?”

அழகான பெண்களுக்கு உதவி செய்ய யார்தான் விரும்ப மாட்டார்கள்? — அழகிலும் அவள் ஓர் அதிரூப சௌந்தரியவதியாயிற்றே! கரும்பு தின்பதற்குக் கூலியா வேண்டும்? இதனால் இப்படியொரு கேள்வியை முன்வைத்து அவளின் ஆக்ஞைக்காகக் காத்திருந்தேன்.

“பெரிதாக ஒன்றுமில்லை! உங்களை இங்கு பார்த்த மாத்திரத்திலும், நீங்கள் இங்கு விமானத்தின் வருகைக்காக காத்திருக்கும் சூழலை நோக்கியவிடத்திலும் நீங்கள் ஒரு இலங்கைத் தமிழரென்பதை யூகித்துக்கொண்டேன். நானும் இலங்கை திரும்பவிருப்பதால் தாயகம் திரும்பும் வரை உங்களை பேச்சுத்துணைக்கு அழைக்கலாம் என்றிருந்தேன். தவிர, உங்களை இங்கு கண்டதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே ஏற்படுகிறது.” இவ்விதமாக அவள் கூறி முடித்தாள்.

“மிகவும் மகிழ்ச்சி! இப்படியொரு சந்தர்ப்பத்திற்காகவே நானும் ஏங்கியிருந்தேன்—அதிலும் வலிய வரும் துணையை



அப்பா: ராமு, பாடசாலையில் இன்று என்ன படித்தாய்?

ராமு: காலங்களைப் பற்றிப் படித்தேன் அப்பா!

அப்பா: மரத்தில் இருந்து விழுந்தான்—என்ன காலம் சொல்லு பார்க்கலாம்?

ராமு: அவன் கஷ்ட காலம் அப்பா!

—தியாகராசா-ஜெயதேவநேசன்

நான் வேண்டாம் என்று கூறுவேனா?''

இருபொருள் பதிந்த வார்த்தையை வேண்டுமென்றே அழுத்திப் பிரயோகித்து என் ஆவலை நானும் வெளிக்கொணர்ந்தேன்.

இப்படியாக எங்கள் பேச்சு ஆரம்பித்தது...... ஆகாய வீதியைத் தன் ஆதிக்கத்திற்கு அடிபணிய வைத்த பெருமையில் பரந்த அவ்வெளிப் பிரதேசத்தை பேரிரைச்சலுடன் ஊடுருவிச் செல்லும் ஆகாய ஊர்தியினுள்ளும் அது தொடர்ந்து நீடித்தது.

''மிஸ், லலிதா! தப்பாக எண்ணிக் கொள்ளாதீர்கள், உங்களை எனக்கு நன்றாகப் பிடித்திருக்கிறது. நீங்களும் என்னை விரும்பினால் உங்களையே நான் திருமணம் செய்து கொள்ளலாம் என்றிருக்கிறேன்.'' என் உள்ளக்கிடக்கையின் உண்மை நிலையை நீண்ட பேச்சுப் பரிச்சயத்தின் பிற்பாடுதான் பிரஸ்தாபித்தேன்.

பதிலொன்றும் பேசாது மோனச் சிரிப்பொன்றை யுதிர்த்த அவள் இருந்த நெருக்கத்தின் இறுக்கத்தை மேலும் பலப்படுத்தினாள். எனது பேச்சை இந்தச் செய்கையின் மூலம் அவள் ஆமோதிப்பதையுணர்ந்து எதிர்வரும் நமது திருமண இல்வாழ்வின் அன்பு பரிசாக அவள் கொவ்வையிதழ் மூலம் அந்த விமானத்தில் வைத்தே ஒரு அச்சாரம் வாங்கிக் கொண்டேன். இதை அவள் தடுக்க இல்லை.

பலன்...?

இச்சம்பவம் நிகழ்ந்த சில நாட்களுக்குள்ளாகவே நாங்கள் திருக்கோணமலை சிவன் கோயிலில் வைத்து கணவன் மனைவியாக நாலு பெரியவர்கள் மத்தியில் ஐதீகச் சடங்குகளின் மூலம் பதிவு செய்து கொண்டோம்—இதை பதிவுச் சட்டத்தின் சரத்துக்களும் உறுதிசெய்தன.

என் சுய சரிதத்தை இது வரை சலிப்புத்தட்டாது வாசிக்கும் என் அன்பு வாசகர்களே...!

இச்சம்பவம் அதாவது எனக்கும் லலிதாவிற்கும் திருமணம் நடக்கும் பொழுது எனக்கு வயது நாற்பத்திமூன்று.—ஆனால் இன்று எனக்கு ஐம்பத்திஏழு வயது பூர்த்தியாகின்றது. எமக்குத் திருமணமாகிக் காலம் கோடிட்டு மறைத்த ஆண்டுகள் ஏறக்குறைய பதினான்கு வருடங்கள்.—ஆனால் தற்போது எங்களுக்குப் பதினாறு பிள்ளைகள் இருக்கிறார்கள்! எப்படி என்று மூக்கின் மேல் விரலை வைக்காதீர்கள். தவறொன்றுமில்லை!

கடந்த ஒரு பிரசவத்தின் போது என் அன்பு மனைவி லலிதா ஒரே சூலில் நான்கு குழந்தைகளையல்லவா ஈன்று விட்டாள்! இது — கணவன் மனைவியாகிய எம்மிடையே உள்ள உண்மையான தாம்பத்திய அன்பையும், இன்று இலங்கையில் உள்ள தமிழர்களின் சனத்தொகையை இரட்டிப்பாக நான் மாற்றித்தர முயற்சிக்கும் தேவையையும் அடிப்படையாகக் கொண்டுள்ளமையினால் தயவு செய்து என் ஐம்பத்திஏழுவயது இளமையின் சார்பில் மன்னிப்புக் கோருகிறேன். இதில் மன்னிக்க என்ன இருக்கிறது? என் இளமையின் சேவை நாட்டிற்குத் தேவையல்லவா? என் கருத்தை முடிவாகச் சொல்லி விடுகிறேன்.

''இனத்தைப் பெருக்கியாவது இன விடுதலை காண வேண்டும். — அப்போதுதான் ஆயிரம் சிவகுமாரன்கள் இந்த நாட்டிலே உருவாக முடியும்!'

—(யாவும் கற்பனை.)



ஓவியத்தில் இசைக் கலைஞர்

ஓவியர் ச. பெனடிக்ற்

இந்த மண்ணில் பிறந்த மனிதர்களில் ஒரு சிலர் மட்டும் அரும்பெரும் சாதனைகளை நிலைநாட்டி வந்தனர்—வருகின்றனர். அப்படிப்பட்டவர்களில் இசைக் கலைஞர் ஒருவரும் அடங்குகின்றார் என்னும் போது, அவர் யார்? பெயர் என்ன? அப்படியென்ன சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்? என்றும் நீங்கள் கேட்க விரும்புவீர்கள் என்பது எனக்குத் தெரியும். இரத்தினச் சுருக்கமாக அதைச் சொல்லி வைக்கின்றேன் உங்களுக்கு.

முதலிலே இதிலுள்ள ஓவியத்தைப் பாருங்கள்! இப்போது அவர் யார் என்று தெரிந்துகொள்வீர்கள்! அழகுக் கலைகளில் அவற்றிலும் உடனடியாக உணர்ச்சி—கவர்ச்சியை ஊட்டி மெய்மறக்கச் செய்யும் கலைகளில் இசைக் கலையும் ஒன்றாகும். எத்தனை பேர் பாடுகிறார்கள்? அதற்காக எத்தனை பேர் கூடுகின்றார்கள்? இதிலிருந்து பாடகர் எப்படிப்பட்டவர் என்பதை எளிதில் அறிந்துகொள்ள முடிகிறதல்லவா? பல இசைக் கச்சேரிகளின் முடிவில் பாடகரும் பக்கவாத்தியக்காரர் மட்டும் மிஞ்சியிருந்ததாக நாம் கேள்விப்படுவதுண்டு. ஆனால், சில கச்சேரிகள் மட்டும் கும்பல் குலையாத பெரும் சனக் கூட்டமாகக் காட்சி கொடுக்கும். அவற்றுள் ஒன்றுதான் இசைக் கலைஞர் மதுரைச் சோமு அவர்களின் கச்சேரி என்றால், யார்—என்ன சொல்லப் போகிறார்கள்?

தமிழ் நாட்டிலுள்ள மாநிலக் கல்லூரியில்—ஓவியக் கலைப் பேச்சு நிகழ்த்துவதற்காக அண்மையில் சென்னை சென்றபோது திரு. சோமு அவர்களுடன் பழக நேர்ந்தது. இவரையும் ஓவியமாக வரையவேண்டும் என்ற பெரு விருப்பத்துடன் நுங்கம்பாக்கத்தில் இவர் வசிக்கும் வீட்டிற்கு ஒரு நாள் சென்றேன். வீட்டின் வெளி வாசலில் சென்றதும் ஒத்திகை ஒன்று நடந்துகொண்டிருப்பதாக அறிந்து, சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றேன். அந்த அறைக்குள் இருப்பவர்கள் யாராக இருக்கலாம் என்பதைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு எனது தலையைச் சிறிதளவு உள்ளே நீட்டினேன். அவ்வளவுதான் ''ஏன் உள்ளே வந்து இருக்கலாமே'' என்றார் ஒருவர். அவர் யார் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியாதிருக்கும் நிலையில் உள்ளே சென்றேன் நான். அரை மணி நேரமாக இசையின்பக் கடலில் மூழ்கித் தத்தளித்து, பின்னர் ஒருவாறு மூர்ச்சை தெளிந்தபின்னர், என்னை அழைத்தவர் அவர்தான் என்று தெரிந்துகொண்டேன். மேலும் நான் வந்த நோக்கத்தை உடனடியாக அவருக்குச் சொல்வதற்கு முன்பதாகவே. ''நீங்கள் யார்? என்பது எனக்குத் தெரியும். அது ஒருபுறம் இருக்க, இப்போது பகல் உணவை முடித்துக்கொண்டு, பின்னர் பேசிக்கொள்ளலாம்'' என்று அவர் சொன்ன வார்த்தைகள், அந்நேரம் சாப்பிடுவதற்கு உட்கார்ந்த அனைவருக்கும் ஒரு பெரும் திகிலைக் கொடுத்தன. எத்தனை பெரிய ஞானம் இந்த மனிதருக்கு!



அறுசுவை உணவு அழகாக முடிந்ததும் ஓவியம் வரைவதற்கு மேல்மாடி உகந்தது என்று கூறியபடி கலைஞரை அங்கு அழைத்துச்சென்று ஓவியமாக வரைந்தேன். இதில் தங்கள் கருத்தை எழுதுங்கள் என்று கூறியதும், அவர் எழுதிய வார்த்தைகள் ஓவியக் கலையில் அவர் கொண்டிருக்கும் பக்தியையும் பாசத்தையும் எளிதிலே எல்லோருக்கும் புலப்படுத்தியது.

இசைப் பெரும் புலவர் மதுரைச் சோமு அவர்களின் கச்சேரிக்குப் பக்கவாத்தியங்கள் படும்பாடு பெரும்பாடுதான். இதுவும் ஒரு பெரும் சாதனைதானே!

தெய்வீகம்

—ஒரு கிறுக்கல்

அவளிடம் நான் எதிர்பார்க்கமுடியாத, எதிர்பார்க்ககூடாதவற்றையெல்லாம் எதிர்பாராத நேரத்தில் எனக்கு தந்தவள் அவள்,

மங்கையரின் ஏமாற்றம் தாங்காமல் நான் மதுக்கிண்ணம் ஏந்திய போது, அது வல்ல மதுக்கிண்ணம் என்று தன் இதழோரத்தில் மது போதை தந்தவள் அவள்.

என்இதயத்தை உனக்குதந்து விட்டேன்என்று உதட்டளவில் ஒப்பாரிவைக்கும் உலகத்தில், அதை உண்மையாகவே தந்ததற்கு ஆதாரமாக தன் நெஞ்சத்தை என் மஞ்சமாக்கியவள் அவள்.

இருந்ததைக்கொடுத்தார்கள் கொடைவள்ளல்கள், இல்லாமலேயே எனக்கு பாலூட்டியவள் அவள்.

அடிகூடபட இயலாத அங்கங்கள் சிலவற்றில் என் கடிகளை தாங்கிக்கொண்டவள் அவள்.

மனிதனை மனிதன் பலிகொள்ளும் போர்க்களத்துக்கு வீரர்களை அனுப்பும் அறிவுகெட்டவர்கள் மத்தியில், என் மகிழ்ச்சிக்காக தன்னைப்போர்க்களமாக்கி என்னைப்போராடவிட்டவள் — இரத்தம் சிந்தியவள் அவள்.

என் இன்பத்துக்காக துன்பப்பட்டவள், அந்த துன்பத்திலே இன்பம் கொண்டவள்.

இவள்தான் என் தெய்வீகக் காதலி.

இந்த சமுதாயத்தின் சட்டதிட்டங்களின்படி பரந்த உலகத்தின் குறுகிய மனப்போக்கின்படி நாங்கள் உடலால், உள்ளத்தால் நெருங்கமுடியாதவர்கள்; நெருங்கக் கூடாதவர்கள்.

மதம்பிடித்தவர்கள் சொல்கிறார்கள்; நான் ஒரு மதமாம், அவள் ஒரு மதமாம், இதில் அவர்களுக்கு சம்மதம் இல்லையாம்.

தெய்வீகமான எங்கள் காதலுக்கு தெய்வங்களாலேயே வேலி போடுகிறார்கள்.

சுதந்திர உலகம் என்று தன்னைத்தானே கூறிக்கொள்ளும் உலகம் எங்கள் தெய்வீக எண்ணங்களுக்கு விலங்கிட்டு எங்களை அடிமைகளாக்கிவிட்டது.

குருடனுக்குத் தானே கண்ணின் முக்கியம் புரியும், அடிமைக்குத்தானே சுதந்திரத்தின் பெறுமதி தெரியும்.

சில வேளைகளில் சமுதாயத்தின் கட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு பாடியபடி சுதந்திரப் பறவையாக அவள் பறந்து வருவாள். அந்த சொற்பவேளையில் நாங்கள் அனுபவிக்கும் சுதந்திரம் இருக்கிறதே... அப்பப்பா! சொல்லி முடியாதது அது.

இன்பத்தில்தான் சுதந்திரம் பிறக்கிறதா அல்லது சுதந்திரத்தில்தான் இன்பம் பிறக்கிறதா என்று சொல்லமுடியாத இன்ப சுதந்திரம் அது.

எங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பக்கத்தையும் இந்த உலகம் படிக்கும் காலம் வரும்போது இது காதல் அல்ல காமம் என்று காறி உமிழும் என்ற பெரியதொரு உண்மை எங்களுக்கு தெரியும்.

தசைகளின் உராய்வுக்காக ஒதுக்கிடம் தேடிய ஊதாரிகள் என்ற பட்டம் எங்களை வந்தடையும் என்பதை நாங்கள் நன்றாக புரிந்துகொண்டிருக்கிறோம்.

இந்த பாழாய்ப்போன உலகத்தைப் பார்த்து நான் ஒன்று சொல்வேன்!...

தெய்வத்தின் அற்புதப்படைப்பான மலர்களைப் பறித்து, அதைத்தெய்வத்துக்கே சூடும் அளவு தெய்வீகத்தை காணும் நீங்கள், அதே தெய்வம் படைத்த அழகிய படைப்பான அவள் அங்கங்களில் நான் காணும் தெய்வீகத்துக்கு மட்டும் ஏன் காமம் என்று நாமம் சூட்டுகிறீர்கள்.

தெய்வம் தந்த பரிசுகளான அழகிய அவயவங்களை வெளிக்

அமிர்தநதி சுதர்சன்

உங்களுக்குப் புரிகிறதா?

NEETZIL VATZA EELAATATAIYIDDU KAVALAIPPADUPATUDANN ENNATU AALZNTA TUKKATTAI TETZIVITTUKKOLXK IREENN = CHE PATTATZAA JASING—KAM.

—இது என்னவென்பதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா அல்லது சிதம்பர சக்கரத்தைப்பேய் பார்த்ததுபோல விழிக்கிறீர்களா? நம்பினால் நம்புங்கள்! இதற்குப்பெயர்தான் தமிழென்று கூறுகிறது இலங்கை தந்தித் திணைக்களம்! வேலணையைச்சேர்ந்த தமிழர் ஒருவருக்கு கொழும்பிலிருந்து இன்னோர் தமிழர் கொடுத்த தமிழ்த்தந்தி மேற்கண்டவாறு புரிந்துகொள்ளமுடியாதபடி ஆங்கிலப்படுத்தப்பட்டு சென்றிருக்கிறது. அவர் தமக்குப் புரியவில்லையென்று எம்மிடம் வந்து உதவிகோரினார். எமக்கும் எதுவும் புரியவில்லை! உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?

காட்டும் ஆடையுடன் ஆடும் பரதத்தை தெய்வீகக்கலை என்று ஒப்புக்கொள்ளும் உலகம்—

அங்கங்கள் தெரிய, தெய்வீகம் பொலிய நிற்கும் வீனஸ் சிற்பத்தைப்பார்த்து காதற் தேவதை என்று கூறும் உலகம்—,

தமிழகத்துக்கோயில்களினுள் கவர்ச்சிப்படைப்புக்களுக்கெல்லாம் திரையிட்டு மறைக்காமல் திரைமறைவில் இருக்கும் தெய்வங்கள், தெய்வீகமணம் கமழ காட்சி தரும்போது பக்திகொண்டு பரவசப்படும் உலகம்—

நான் அவளில் காண்பதை தெய்வீகம் என்று சொல்ல மறுக்கிறது.

எங்களுக்குத் தெரிகின்றது நாங்கள் கொண்டுள்ளது காமம் அல்ல, அதற்கு ஒருபடி கூடிய காதலும் அல்ல —அதற்கும் அப்பாற்பட்ட தெய்வீக பிணைப்பு.

நான் நினைப்பதை அவள் சொல்கிறாள். அவள் சொல்ல முன் நான் செய்கிறேன்.

அன்னையிடம் அன்பைபெறலாம். மனைவியிடம் காதலைப் பெறலாம். தாசியிடம் இச்சைகொள் இன்பத்தைப்பெறலாம் என்பார்கள். ஆனால் இவை மூன்றையும் ஒன்றாகத் தரும் இவளிடம் நான் தெய்வீகத்தைக் காண்கிறேன்.

இவளை முற்றாக அறியுமுன் எத்தனையோ பெண்கள் என்னைக் காதலித்திருக்கிறார்கள். அவர்களைவிட இவள் அழகானவள் என்று திட்டவட்டமாக சொல்ல முடியாதுதான். ஆனாலும் அவர்களிடம் இல்லாத ஏதோ ஒன்று என்னை இவள் பக்கம் இழுக்கிறது.

இதற்குத்தான் தெய்வீகம் என்று நான் பெயர் சூட்டுகிறேன்.

நாங்கள் ஒன்றாக நெருங்கி பிணைந்திருதபோதும் கூட காமம் எங்கள் தலைக்கேறியது கிடையாது.

எங்கள் உடல்கள் நெருங்கும்போது உள்ளங்கள் ஒன்றாகி பிணைவதை எங்களால் உணர முடிகிறது.

அவள் துன்பத்தை நான் அறிகிறேன். என் இன்பத்தில் அவள் பங்குபெறுகிறாள்.

எங்கள் வியர்வைகள் சங்கமமாகும்போது இதயங்கள் மங்கலம் பெறுகின்றன. இந்த இதயத்தின் தெய்வீகபிணைப்பிற்கே நாங்கள் உடல்களை துணைக்கு அழைகிறோம்.

இது எப்படி காமம் என்ற நாமம் பெறும். ஆயிரம் தடவைவேண்டுமாலும் அடித்துச்சொல்வேன் இது தெய்வீகமே!

இத்தனைக்குப் பிறகும் எங்கள் தெய்வீகபிணைப்பை யாராவது காமம் என்று சொல்வார்களானால் அது ஒன்றேபோதும் தெய்வம் அவர்களை நாஸ்தீகர்கள் என்று கணக்கெடுத்துக் கொள்ளும்.



காதலன்!- கண்ணே, வானும் நிலவும் போல நாம் இணைவோம்!

காதலி!- போயும் போயும் பழைய உவமைகளை ஏன் கூறுகிறீர்கள்? அப்பலோவும் சோயுசும் போல இணைவோம் என்று கூறுங்கள்!

கொடுமை!

கொடுமை அனைத்தும் கடின சித்தத்திலிருந்தும் பலவீனத்திலிருந்துமே தோன்றுகிறது!

ஸெனிகா

அவனும் மனிதனே!

யோ. சண்முகநாதன்



மயில்வாகனத்தை நான் அடிக்கடி கடைத் தெருக்களிலும், திருவிழாக்கள் பொதுக் கூட்டங்களிலும் சந்திப்பதுண்டு. மூன்று சக்கர வண்டி ஒன்றின் உதவியோடு 'சுவிப்' டிக்கற்றுகள் விற்பனை செய்து வரும் அவன் ஓர் அனாதை. சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க அவன், இருபது ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஒரு விபத்தினால் தனது கால்களிலொன்றை இழந்துவிட்டான்.

நன்றாக கவனித்துப் பார்த்தால் தவிர, சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு அவன் ஒரு முடவன் என்பதோ, முழங்காலுக்குக் கீழே ஒரு கால்தான் உண்டு என்பதோ தெரியாது. அவ்வளவு தூரம் அவன் தனது குறையை கச்சிதமாக மூடி மறைத்திருப்பான்.

ஒண்டிக் கட்டையாக— வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக்கொண்டிருக்கும் அவனுக்கு கைகொடுத்து உதவ ஒரு துணைவி மட்டும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் எனச் சில சமயங்களில் நான் எண்ணுவதுண்டு. வாழ்க்கைத் துணைவி என்றால் அது இவன் போன்றவர்களுக்குத் தானே அவசியம்?

ஆனால் இதெல்லாம் எவ்வளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது என்பதை, அவன்மீது கொண்டுள்ள அளவுக்கதிகமான பரிவினாலோ என்னவோ நான் சிந்திக்கத் தவறிவிடுகிறேன்.

மயில்வாகனம் யாரையும் இரந்து வாழாமல்— யாருக்கும் சுமையாக இல்லாமல் தன் கையே தனக்குதவி என்று காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறான். அவனுக்கு ஏதாவது சிறு உதவியாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வமிகுதியால், எனக்கு 'அதில் நம்பிக்கையில்லை' என்ற போதிலும் அவனிடம் அவ்வப்போது 'சுவிப்' டிக்கற் வாங்குவேன்.

* *

மயில்வாகனம் முன்போலல்லாது இப்பொழுது சிறிது இளைத்துக் காணப்பட்டான். 'மிகமிகத் தூரதிஷ்டசாலியான அவனிடன் போய் அதிஷ்டலாபச் சீட்டுப்பெறுவதா?' என்ற ஞானோதயம் மக்களுக்கு ஏற்பட்டுவிட்டதோ என்னவோ என்ற எண்ணத்துடன் அவனை அணுகிறேன்.

"வருவாய் எப்படி இருக்கிறது?'' என்றதற்கு 'பரவாயில்லை. எப்போதும் போலதான்'' என்றான்.

''மனைவி என்று ஒருத்தி இருந்திருந்தால் வாட்டத்துக்கான காரணத்தைக் கண்டறிந்திருப்பாள். முடிந்தால் அதற்கு மருந்தும் கண்டிருப்பாள். என்ன அப்படித்தானே?''

"நடக்கமுடியாததையும் நடக்கக்கூடாதவற்றையுமே பேசிக்கொண்டிருக்கிறீர்களே!'' அவன் குரலில் விரக்தி காணப்பட்டது.

''நடக்கமுடியும் — நடக்கலாம் என்றால்...?''

"எவளாவது ஒருத்தி — அவளாகவே வந்தால் தானே இது முடியும்''

"அப்படியானால் உங்களுக்கும் 'அந்த' ஆசை...''

அவன் இடைமறித்து 'என்ன் உங்களுக்கும் என்று வித்தியாசமாகக்கேட்கிறீர்கள். உணர்ச்

நாதஸ்வர வித்துவான்:—ஆகா, தேவமனோகரி—உன்னை நினைக்கும்போதே எவ்வளவு இன்பம்! உன்னுடன்இரண்டறக்கலந்துவிட்டால் இந்த உலகையே மறந்துவிடுகிறேன்!

நாதஸ்வர வித்துவானின் மனைவி:—இந்தா பாருங்க, உங்களுக்கு என்ன துணிச்சல்? என் முன்னாலேயே அந்த தேவமனோகரியைப் பற்றி இப்படிப் புகழுகிறீகளே! யார் அவள்? சதா அவள் எண்ணத்திலேயே மூழ்கியிருக்கிறீர்கள்!!

நாதஸ்வர வித்துவான்:—.........???

சிகளும் ஆசைகளும் எல்லாருக்கும் பொதுதானே! ஊனம் என்பதால் அவைகளும் உறங்கிவிடவேண்டும் என்பதில்லையே! எனக்கு உடலின் ஒரு பகுதி ஊனம்தான். உணர்ச்சியில் அல்ல.'' என்றான்.

“உணர்ச்சிகள் இருந்தும் அவைகளின் பிரவாகத்தை அடக்கிவைத்திருக்கும் நீங்கள் உண்மையிலேயே ஒரு தியாகிதான்.''

“தியாகியோ என்னவோ? ஆனால் நிச்சயம் நான் துரோகியல்ல.'' என்றான் இரத்தினச் சுருக்கமாக.

இந்தச் சந்திப்பின்போது, மயில்வாகனம் ஒரு சிறந்த அறிவாளி என்பதையும், நிறையப் படிப்பவன், நன்றாகச் சிந்திப்பவன் என்பதையும் நான் புரிந்துகொண்டேன்.

* *

ஊரின் ஒதுக்குப் புறத்தில் ஒரு சிறிய குடிசை அதுதான் மயில் வாகனத்துக்கும் அவன் சயிக்கிளுக்கும் புகலிடம்.

வெறும் பழக்கமாக இருந்த எமது உறவு இப்பொழுது வலுத்துவிட்டது. மயில்வாகனம் இப்பொழுது என் நெருங்கிய இலக்கிய நண்பனாகிவிட்டான். அன்று மாலை அவனது விருந்தாளியாக அவனது வீட்டுக்கே சென்றுவிட்டேன்.

குடிசைக்குள் நுழைந்ததும் எனக்கு வியப்புத்தாங்க முடியவில்லை. அங்கு ஏராளமான நூல்கள் என்றும் பத்திரிகைகள் என்றும் குவிந்து கிடந்தன. மொத்தத்தில் அவனது குடிசை ஒரு சிறிய கலைக்கூடமாகவே எனக்குத்தோன்றியது.

“இவ்வளவையும் வாங்கினீர்களா? இவ்வளவும் உங்களுடையதா?'' நான் வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டேன்.

“ஓசியில் பெறும் பழக்கமே என்னிடம் கிடையாதே” என்றவன் தொடர்ந்து சொன்னான்: “ஆமாம் நான் யாருக்காகவும் எதுவும் சேயாத் வைக்கவேண்டிய அவசியமில்லை அல்லவா? அதனால் தேவைக்கு அதிகமாக பணம் கிடைக்கும் போதெல்லாம் அதற்குப் புத்தகங்களும் பத்திரிகைகளுமே வாங்குவேன்.''

“தனிமைத் துயரால் வாடும் தங்களுக்கு அவைகள்தான் துணை போலும்.''

“தனிமையும் சில புத்தகங்களும் மனிதனை மிக மிகக் கீழே தள்ளிவிடும் தகுதியும் பெற்றவை.''

“நீங்கள் என்ன சொல்லுகிறீர்நள்?'' என்ற எனது கேள்விக்கு “உங்களுக்குத்தெரியாதா'' என்று அர்த்தத்துடன் சிரித்துக்கொண்டான்.

* *

பேச்சுச் சுவையில் நன்றாக இருட்டிவிட்டதையும் மறந்துவிட்டேன். ஊருக்கு ஒதுக்குப் புறமான இடம் — போக்குவரத்துச் சாதனங்களை நாடுவதானால் நீண்ட தூரம் நடக்க வேண்டிய நிலை — மயில்வாகனத்தின் வற்புறுத்தல்— இவைகள் எல்லாம் சேர்ந்து அன்றைய இரவையும் அவனுடனேயே கழிக்கும்படி வைத்துவிட்டதே.

நள்ளிரவை நெருங்கும்நேரம் நான் ஒரு பாட்டம் தூங்கி விழித்துவிட்டேன். அப்போது:

பக்கத்துப் பாயில் படுத்திருந்த மயில்வாகனம் முனகும் சத்தம் கேட்டது. என்னவோ ஏதோ எனப் பயந்த நான் டோச் விளக்கைத் தேடினேன்.

அதற்கிடையில் அவனின் முனகல் நின்று, பெரிதாக ஒரு பெருமூச்சு எழுந்து மடிந்தது.

நான் டோச் விளக்கின் ஒளியை அவன் மீது பாய்ச்சினேன்... அவனது சேட் வியர்வையால் நனைந்திருந்தது முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள்...‘சீ இப்படியும் ஒரு பழக்கமா இவனுக்கு?’

அவன் தவறிழைத்த குற்றவாளிபோல் என்முன் கூனிக்குறுகிக் கிடந்தான். என்ன பேசுவதென்று இருவருக்குமே தெரியவில்லை. அதன் பிறகு நான் தூங்கவில்லை. அவனும் தூங்கியிருக்க மாட்டான்.

விடிந்தது, மயில்வாகனம் அப்பொழுதும் என்னைப் பார்க்க நாணியவனாக— இரவு நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்கும் பாவனையில் — தனக்குள் ஊமை அழுமை’ அழுதுகொண்டிருந்தான்.

நான் விடைபெற்றுக்கொண்டேன். அவன் மிகவும் சிரமத்துடன் வேதனையோடும் “என்னை மன்னித்துவிடு'' என்றான்.

“உன்னை ஏன் நான் மன்னிக்க வேண்டும்? நீ எனக்கு ஒரு துரோகமும்செய்யவில்லையே!'' நான் சொல்லி விட்டுத்தெருவில் இறங்கி நடக்கிறேன்.

‘உணர்ச்சிகளும் ஆசைகளும் எல்லாருக்கும் பொதுதானே! ஊனம் என்பதால் அவைகளும் உறங்கிவிடவேண்டும் என்பதில்லையே! ‘தனிமையும் சில புத்தகங்களும் மனிதனை மிகமிகக் கீழே தள்ளிவிடும் தகுதியும் பெற்றவை!

—மயில்வாகனம் சொன்னவைகளில் முன்பு புரியாதவைகள் கூட இப்போது எனக்குப் புரிந்துவிட்டன. (கற்பனை)

நோய்க்கு இடங்கொடேல்

இளம்பிள்ளை வாதம்
(POLIOMYELITIS)

டாக்டர்
கே. இராமநாதன்

இளம்பிள்ளை வாதத்தின் கொடுமைகள் மக்களுக்குத் தெரியாததல்ல. போலியோ வைரஸ் (Poliovirus) என்னும் நுண் கிருமியினால் குழந்தைகளுக்கு இவ்வியாதி வருகிறது. இலேசான காய்ச்சலில் தொடங்கி இந்நோய் கைகால்களை முடக்கியும் உயிருக்கு ஆபத்தையும் விளைவிக்கலாம். இளம்பிள்ளை வாதம் வராமல் தடுக்கும் வழிகளையும், வந்தபின்னர் என்ன செய்யவேண்டுமென விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கு.

போலியோ நுண்கிருமிகளில் மூன்று பிரிவுகள் உள. பொதுவாக நுண்கிருமிகளால் வரும் விவாதிகள், ஒருமுறை வந்தால் மறுமுறை சாதாரணமாக வருவதில்லை. ஒன்றுமுதல் ஆறு வயதுவரை உள்ள குழந்தைகட்கு இந்த வியாதி வரும். ஆகஸ்டு முதல் நவம்பர் வைர உள்ள நான்கு மாதங்களில் தான் இந்த வியாதி அதிகம்.

வியாதி பரவும் முறை

சுவாசிக்கும் காற்று வழியாகவோ அல்லது உட்கொள்ளும் உணவு வழியாகவோ இந்த நுண் கிருமிகள் உடலுக்குள் புகுந்த பின்னர் ரத்தம் அல்லது நரம்பு வழியாக முதுகுத் தண்டு வடம், மூளை ஆகிய உறுப்புக்களைப் பாதிக்கின்றன.

வியாதியின் அறிகுறிகள்

காய்ச்சல் தலைவலி, வாந்தி ஆகியவை வியாதியின் ஆரம்பத்தில் தோன்றி ஒன்று அல்லது இரண்டு நாட்கள் நீடிக்கின்றன. மூன்று, நான்காவது நாட்களில் கழுத்து, முதுகுப் பிடிப்பு முதலியன ஏற்படுகின்றன. வியாதி ஆரம்பித்த இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை வாதம் வரலாம், இந்த வியாதி முதுகுத் தண்டைப் பீடித்தால் கைகால்களும் உதரவிதானமும் பயனில்லாமல் போய்விடும். சிற்சில சமயங்களில் இந்நோய் மூளையையும் தாக்கலாம். சுவாசித்தல். இரத்த ஓட்டம், ஆகியவை பாதிக்கப்படும். எச்சில் விழுங்கமுடியாமல் தொண்டையிலேயே தேங்கி மூச்சை அடைக்கும்.

மூளையை இளம்பிள்ளைவாதம் பாதித்தால், குழந்தை பிழைப்பது கடினம். முதுகுத் தண்டு வடத்தில் மட்டும் வியாதி இருந்தால் 90 சதவிகிதம் பிழைத்துவிடும். வாதம் ஏற்பட்ட முதலே மருத்துவம் செய்ய ஆரம்பித்தால் 50—75 சதவிகிதம் வரை முழுக் குணம் ஏற்பட்டுவிடும். ஒரு மாதம் வரை வாதம் ஏற்பட்ட கை கால்களில் அசைவு இல்லை எனில் அந்தக் கை கால் குணமடைவது மிக மிகக் கடினம்.

தடுப்பு முறை

இன்று உள்ள தடுப்புமுறையால் இளம்பிள்ளை வாதத்தை நம் நாட்டைவிட்டே ஒழித்துவிடலாம். இந்தத் தடுப்பு மருந்து வாய் வழியாக கொடுக்கப்படவேண்டும். மாதம் ஒருமுறை மூன்று மாதங்களுக்குக் கொடுக்கவேண்டும். குழந்தை பிறந்த மூன்றும் மாதமே இந்த தடுப்புமருந்தை கொடுக்க ஆரம்பிக்கலாம்.

சிகிச்சை முறை

இளம்பிள்ளை வாதம் என்று தெரிந்தவுடனேயே டாக்டரிடம் சென்று ஆலோசனை பெறுவது நலம்.

(அ) ஒரு குழந்தையிடமிருந்து மற்ற குழந்தைகட்கு இந்நோய் பரவுமாதலால், வியாதிதந்த குழந்தையைத் தனியாக வைத்து சிகிச்சை செய்தல் வேண்டும்.

(ஆ) வாதம் வந்த கைகால்களில் உள்ள தசைகள் இழுபடாமல் இருக்க மணல் பைகள் கால்களைச் சுற்றி வைக்கவேண்டும்.

(இ) கை கால்கள், முதுகுவலி நீங்க வெந்நீர் பைகள் வைக்கவேண்டும். வலிநீங்க மாத்திரைகளும் கொடுக்கலாம் டாக்டருடைய ஆலோசனையின் பின்னர்.

(ஈ) காய்ச்சல், உடம்பு கைகால்கள் வலி ஆகியன நீங்கிய பின்னர் வாதம் வந்த கைகால்களுக்கு உடற்பயிற்சியும் (Physiotherepy) மின்சார சிகிச்சையும் (Electrical Stimulation) செய்யவேண்டும்.

(உ) ஊரில் இளம்பிள்ளை வாதம் இருந்தால் ஊசி போட்டுக்கொள்ளுதல் அவசியம்,

தமிழ் பெண்களே வழிகாட்டுங்கள்!

தெய்வ வடிவமாகவும் அன்புக்கு நிலைக்களனாகவும் கடவுளால் படைக்கப்பட்ட பெண் இனத்தின் நெஞ்சை அள்ளும் கலை அலங்காரக் கலைதான். பக்குவமான குணமும் கனிவான அன்பும் இனிய சுபாவமும் பெண்களின் அக அழகு அலங்காரங்கள்! பெண்கள் இயற்கையிலேயே கடவுளால் அழகாகப் படைக்கப்பட்டவர்கள். இயற்கை தந்த அந்தப் புற அழகு என்றும் அழகாகவே இருக்கும். ஆனால்... மேலும் நாகரீகமான முறையில் அதனை அழகு படுத்தாமல்... எமது அக அழகை மேன் மேலும் அழகுற அமைத்தால் புற அழகும் தன்னால் அழகு பெறும். வள்ளுவர் கூறிய்துபோல் அகத்திலுள்ள தூய்மையை முகம் என்னும் கண்ணாடி பளிச்சென எடுத்துக்காட்டுகிறது. உதிரத்தோடு உறைந்துவிட்ட நற்பண்புகளை செவ்விதழிலிருந்து வெளிவரும் இனிய சொல். எடுத்துக்காட்டுகின்றது.

இயற்கை அளித்த அழகை மேலும் எடுத்துக்காட்ட மேல் நாட்டு நாகரீகங்களைப் பின்பற்றி செயற்கை அழகு என்ற பெயரில் வேண்டாத பொருட்களையெல்லாம் வாங்கி அலங்கரிக்கிறார்கள். ஏதோ இந்த அழகு எமது மனதுக்கு திருப்தியளிக்கலாம். பார்க்கும் ஒரு சில கண்களுக்கு விருந்தளிக்கலாம். ஆனால் இந்த வேண்டாத அலங்கரிப்பு பலரின் கண்களை மூடவும் முகத்தை சுளிக்கவும் செய்கின்றன. இப்படிப்பட்ட அலங்காரங்கள் நமக்கு தமிழ் பெண்களுக்கு அவசியமா? இதுதான் தமிழ் பெண்ணுக்கு அழகா?

மேல் நாட்டுப் பெண்கள், தமிழ்ப் பெண்களை ஒருவித மதிப்பு, மரியாதைக் கண்கொண்டு பார்க்கிறார்கள். அவர்கள் தமிழ் பெண்களைப்போல் ஆடை அணிய ஆசைப்படுகிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும்போது அப்படியே சேலை கட்டிப்பார்த்து மகிழ்கிறார்கள். பெருமைப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் தமிழ் பெண்கள் வழிகாட்டிகளாக அமைய வேண்டுமே தவிர—அவர்களுடைய உடைலங்காரத்தைப் பின்பற்றி அவர்கள் தமிழ் பெண்கள் மீது கொண்டுள்ள மட்டற்ற மதிப்பை இழக்கச் செய்வது இனிய தமிழ் பெண்களுக்கு அழகைத் தருமா?

ஒரு தமிழ் பெண்ணுக்கு முக்கியமான அழகைக் கொடுப்பது விருந்தோம்பல்தான். வீண்புகழுக்காகப் பலரறிய படாடோபமாக விருந்தளிப்பது அழகைத்தராது. அந்த விருந்தின் மூலம் மன நிறைவைப் பெற்றுவிடவும் முடியாது. விருந்தோம்பலைத் தன்முக்கிய கடமையாக ஒரு தமிழ் பெண் நினைக்கவேண்டும். அன்புடன் விருந்தினரை வரவேற்று தன் கையினால் சமைத்த உணவினை இன் முகத்துடன் பரிமாறும்போது, வந்த விருந்தினர் அதனை மனநிறைவுடன் ஏற்கிறார். அவர்களுடைய நிறைவு முகத்தில் தெரிகிறது. அந்த நிறைவினால்தான் பெருமையடைகிறாள் ஒரு பெண். அந்த பெருமையில் அவள் மனம் பூரிப்படையும் போது... அவள் மேலும் அழகுடன் தென்படுகிறாள். இந்தப் பெருமையும் அழகும் படாடோபமாக விருந்தளிப்பதில் ஒரு பெண்ணுக்கு வந்துவிடுமா?

"புற அழகு அழகல்ல. அது சாரமற்ற ஒரு பொருள். பலவீனங்களை மறைக்கும் திரை. அது ஒரு ஏமாற்றம். அது ஒரு மாயப்" என்கிறார் ஒரு அறிஞர். நற்குணம்தான் ஒரு பெண்ணுக்கு அழகைத் தரும். குணமில்லாத அழகு ஒரு தமிழ் பெண்ணுக்கு எதற்கு? "புன்மைகளை விட்டொழித்து நன்மைகளை நாடி; நற்குணம் என்னும் பட்டாடை அணிந்து நற்செயல் என்னும் ஒப்பனை புரியுங்கள்" என்கிறார் அண்ணல் காந்தி! நாம் உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லிலும் இனிமையும்; நடையில் பணிவும், செயல்களில் செம்மையும், உடையிலே எளிமையும், பார்வையில் நேர்மையும், முகபாவங்களில் உண்மையும் இருந்தால்... இவற்றைவிட பெண்ணுக்கு அழகினை தருவது எது?

—செல்வி வசந்தா கனகரத்தினம்.

இலக்கிய இரகசியம்!

காகிதத்தில் பேனாவைத்து நீங்கள் எழுதத்தொடங்கு முன் பெண் என்பவளை உங்கள் சொந்தத்தாயாக நினைத்துக் கொள்ளுங்கள். உடனே வரட்சியால் வாடிக்கிடக்கும் வையகத்துக்கு வானத்திலிருந்து வண்ணமழை பொழிவதுபோல உங்கள் எழுதுகோலிலிருந்தும் தூய்மையான இலக்கியம் பொழிந்து விடும்!

—காந்தியடிகள்.

சுடர்—சந்தா விபரம்

ஓர் ஆண்டு — ரூபா 12—00
அரை ஆண்டு — ரூபா 6—00

அனுப்பவேண்டிய முகவரி:— நிர்வாகி, சுடர்,
194 ஏ, பண்டாரநாயகா வீதி, கொழும்பு—12.

ஒரு மகாகவியும் விமர்சகரும்

"மகாகவியை விமர்சகர்கள் இருட்டடிப்புச் செய்து வருகின்றனர்"—இப்படியொரு குற்றச்சாட்டு ஐந்து ஆண்டுகளுக்கு முன் விமர்சகர் எஸ். பொ. அவர்களால் கூறப்பட்டது. கலாநிதி க. கைலாசபதி, கவிஞர் முருகையன், கே. எஸ். சிவகுமாரன் போன்றவர்களைக் கருத்திற்கொண்டே அவர் அவ்வாறு கூறியிருக்கவேண்டும். இவர்களும், முற்போக்கு அணியைச் சேர்ந்தவர்களென்று தம்மைக் கூறிக்கொள்ளும் இவர்களுடைய தோழர்களும் கவிஞர் மகாகவியை இருட்டடிப்புச் செய்வதிலும் அவரைப் பற்றிய தவறான கருத்துக்களைப் பரப்புவதிலும் முன்னணியில் நிற்கின்றனர். இவர்களுள் கலாநிதி கைலாசபதியும், முருகையனும் ஒரு சாலை மாணவர்கள்; நண்பர்கள். கே. எஸ். சி, கைலாசபதியினால் விமர்சன உலகில் புகுத்தப்பட்டவர், அவருடைய "ஞானகுரு" கைலாசபதி. இச்சந்தான பரம்பரையினர் மகாகவியை எற்றுக்கொள்ள மறுத்ததற்கு முக்கிய காரணம் அவர் முற்போக்கு அணியைச் சாராது நின்றமையே ஆகும். தனிப்பட்ட பகையும் உண்டென்பாருமுளர்.

இவர்களுடைய விமர்சனப் "பன்னாடை" நல்ல விடயங்களையெல்லாம் ஒழுகவிட்டு, கழிவுகளை மட்டுமே மகாகவியின் படைப்புக்களிலிருந்து தேக்கிவைத்து வாசகர்களுக்கு வழங்குவது வழக்கம். இத்தகைய 'பன்னாடை' விமர்சனங்களில் ஒன்று தமிழமுது (11 ஆம்) இதழில் வெளியாகியுள்ளது. மகாகவி நவனோரதியவாதி என்ற தலைப்பில் கே. எஸ். சி. இதனை எழுதியுள்ளார். இது சிங்கள, தமிழ் மத்தியதர, மேல் தட்டு வர்க்கத்தினர்க்காக தமிழறியாதவர்களுக்காக — ஏரிக்கரையக ஆங்கில ஏட்டில் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றின் தமிழாக்கமாகும்.

ஈழத்தின் சமகாலத் தமிழ்ப் படைப்புக்கள் (Contemporary Tamil Writing in Sri Lanka—K. S. Sivakumaran) என்ற நூலிலும் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது. ஏரிக்கரை ஏட்டிலும் ஆங்கில நூலிலும் மூல நூல் அறிவற்றவர்களே கட்டுரையைப் படிக்க நேர்ந்ததால் அது அவர்களில் எவ்வித துலங்கலையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் "தமிழமுது" கட்டுரை தமிழ்க் கவிதை ஆர்வமுள்ளவர்களிடையே சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மகாகவியை மட்டுமின்றித் தம்மை முற்போக்கு அணியின் மூலவேர்களெனக் கருதும் எம். ஏ. நுஃமான், சண்முகம், சிவலிங்கம் போன்றவர்களையும் குறைத்து மதிப்பிடுவது இக்கட்டுரையின் சிறப்பியல்பாகும்.

மகாகவி நவ(ம)னோரதியவாதி (Neo-Romanticist) என்றிருக்கவேண்டிய தலைப்பு அச்சுப் பிழை காரணமாக அவ்வாறுள்ளதா? அல்லது தம்மைப் போலவே வாசகர்களும் குழப்பமடைய வேண்டுமென்று நவனோரதியவாதி என்ற சொல்லைக் கே. எஸ். சி. உருவாக்கினாரா? என்பது புரியவில்லை. தலைப்பையும் முதலாவது பந்தியையும் பார்க்கும் போது மகாகவி பற்றிய முழுமையான ஆய்வு ஒன்றைப் பொருள் முதல்வாத அடிப்படையில் விமர்சன நோக்கில் கட்டுரையாளர் நிகழ்த்த முயல்

நீதிபதி:- உனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறேன்... நீ ஏதாவது சொல்ல விரும்புகிறாயா...?

குற்றவாளி:- பிரபு... என் பெயர் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும் என விரும்புகிறேன் எனவே தங்கக் கத்தியால் சிரச்சேதம் செய்யும்படி தீர்ப்பளியுங்கள். ஈழத்தில் முதல் முதல் தங்கக் கத்தியால் சிரச்சேதம் செய்யப்பட்ட... என்று என் கல்லறையில் எழுதப்படும்...

நீதிபதி:- ? ? ?

—எஸ். பி. கே. அன்பழகன்,
தென்மட்டுவில்.

கிறார் என்ற எண்ணம் ஏற்பட்டாலும் அடுத்த பந்தி கட்டுரை மகாகவியின் வீடும் வெளியும் பற்றிய இரசனைக் குறிப்பே என்பதை உணர்த்தி ஏமாற்றத்தை அளிக்கிறது. சுருங்கச் சொன்னால் கே. எஸ். சி. யின் கட்டுரை ஈழத்துச் 'செவிநுகர்கனி'களை உண்டோர்க்கும், மகாகவியின் கவிதைகளைச்சுவைத்தோர்க்கும் நல்ல சுவையை விருந்தாகவும் கட்டுரையாளரின் அறியாமையின் ஆழத்தை எடுத்துக் காட்டும் அளவுகோலாகவும் வாய்த்துள்ளது.

இக்கட்டத்தில் மகாகவிக்கும் கே. எஸ். சிக்கும் உள்ள தொடர்பு பற்றியும் தமிழ் வாசகர்கள் தெரிந்து கொள்வது நல்லது. மேலே குறிப்பிட்ட ஆங்கில நூல் இதனைத் தெளிவு படுத்துகிறது. இந்நூலில் இலங்கைக் கலாச்சாரப் பேரவையின் தமிழ் இலக்கிய விழாமலர் (1972) பற்றி கே. எஸ். சி. எழுதிய சுவைக் குறிப்பு உண்டு. மலரில் முருகையன் எழுதிய ஒரு கால் நூற்றாண்டுக் கவிதை வரலாற்றில் தென்னகமும் ஈழமும் என்ற கட்டுரை பற்றியும் கே. எஸ். சி. குறிப்பிடுகிறார்.

மலரின் கட்டுரையின் முதலாம் பகுதியில் முருகையன் 16 கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார். இரண்டாம் பகுதி மகாகவியை மையமாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளது. முருகையன் குறிப்பிட்டவர்களில் பன்னிருவரைத் தமது சுவைக் குறிப்பில் எடுத்து மொழிந்த கே. எஸ். சி. கட்டுரையின் மையமாக அமைந்த மகாகவியின் பெயரைக் கணக்கெடுப்பு என்ற வகையிற் கூடச் சேர்த்துக் கொள்ளவில்லை. (Tamil Writing in Sri-Lanka-Page 8.)

இது தற்செயலாக நடந்த தவறு அல்ல; திட்டமிட்டு அறிவு நிலையில் நின்றே செய்யப்பட்டது. பழைய கட்டுரைகள் திருத்தியும் புதுக்கியும் நூலிற் சேர்க்கப்பட்டுள்ளதாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். வீடும் வெளியும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றமை, கலாநிதி கைலாசபதி யாழ் வளாகத் தலைவரானமை போன்ற புதிய செய்திகள் கட்டுரையில் புகுத்தப்பட்டுள்ளன. எனவே, தவறாக இருந்தால் அது திருத்தப்பட்டிருக்கும். திருத்தப்படாமைக்கு மகாகவியை இருட்டடிப்பு செய்ய வேண்டுமென்ற முனைப்பே என்பது உறுதியாகிறது.

மேலே குறிப்பிட்ட சுவைக் குறிப்பு எழுதப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பின் எழுதப்பட்டதே எமது கட்டுரையின் மையமாக அமைந்துள்ள வீடும் வெளியும் பற்றிய சுவைக் குறிப்பு. அக் குறிப்பிலே கூட மகாகவியின் கவிதைகளைச் சுவைக்க வேண்டும் என்ற ஆர்வமோ, அகவயச் சார்பின்றி நடுநிலையில் நின்று ஆராய வேண்டுமென்ற விஞ்ஞான மனோபாவமோ காணப்படவில்லை. மாறாக, மகாகவியின் சிறப்புக்களை இருட்டடிப்புச் செய்ய வேண்டுமென்ற தீர்மானமே அவரிடம் மேலோங்கி நிற்கக் காண்கிறோம்.

நூலை விமர்சிக்கும்படி கட்டுரையாளரை எவரும் கேட்கவில்லை. அவர் தாமாகவே அதனைத் தெரிந்தெடுத்தார். அவருக்கு மகாகவி மீது பற்றில்லை. 'மகாகவி ரசிகர்கள்' என்று சிலரை அவர் தனிமைப்படுத்தி உரைப்பதால் அவர் மகாகவி ரசிகருமல்லர்

ஒரு விஞ்ஞான மாணவனின் காதல் கடிதம்!

எனதருமைக் காதலியே!

உன்னைச் சந்தித்த நாள் முதல் பொட்டாசியம், ஒட்சிசனை நாடுவது போல் என்மனம் உன்னையே நாடுகிறது.

உன்னைக் கண்ட முதல் நாளே காபனீரொட்சைட்டை அதிகமாக முகர்ந்தவனைப்போல் மதி மயங்கினேன். ஏனெனில், உனது அழகான, பொட்டாசியம் நைத்திரேற்று நிறத்தை ஒத்த மேனிக்கு, அந்த செப்பு நைத்திரேற்று நிறத்தை ஒத்த மினிஸ்கேர்ட் மேலும் மெருகூட்டியதாலாகும்.

உன் லிப்ஸ்டிக் பூசிய அதரங்களைப் பார்த்து செவ்வீயமோ என ஐயங்கொண்டேன்.

அன்று நீ உனது மகனீசிரொட்சைட்டு நிறத்தை ஒத்த தம்பியுடன் பஸ் தரிப்பில் நிற்கும் போது உன்னுடன் கதைப்பதற்கு, நீரில் இட்ட சோடியத் துண்டைப்போல் துடியாய்த் துடித்தேன். அப்போது நீஅணிந்திருந்த குரோமிய மொட்சைட்டு நிறத்தை ஒத்த சன்கிளாஸ் மிகவும் அழகாக இருந்தது.

நீ செப்புக் காபனேற்று நிறத்தை ஒத்த மினிஸ்கேர்ட் அணிந்து உன் தோழிகளுடன் செல்லும் போது சிரித்தால், பொட்டாசியம் குளோரைட்டுப் போல் உன் பற்கள் காட்சி தரும்.

நான் எவ்வளவு முயன்றும் உன் மனதை மாற்ற முடியவில்லையே! இனியவளே உன் பிளாட்டின மனதை செப்பு மனதாக தாழ்த்துவாயாக அல்லது ஆசநீர் கொண்டு வருவேன்.

இவ்வண்ணம்,
உன் காதலன்.

அனுப்பியவர்: கே. ஆறுமுகம், பன்குளம்,

என்பது தெளிவு. அவ்வாறாயின் அவர் மகாகவியின் வீடும் வெளியும் நூலைத் தெரிந்தெடுத்துச் சுவைக் குறிப்பு எழுதியது ஏன்? மகாகவி ஒரு தரங்குறைந்த கவிஞர் என்ற தமது கருத்தை அச்சிற் பொறித்து வைப்பபதைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

முற்போக்காளர்களெனத் தம்மை இனங்காட்டுபவர்கள் இலக்கியத்திலும் விமர்சனத்திலும் விஞ்ஞான நோக்கைக் கைக்கொள்வர்.

'மகாகவி நவ(ம)னோரதியவாதி (?)' என்ற கருத்தை நிலைநாட்டப் புறப்பட்ட கட்டுரையாளர் 1943க்கும் 70க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் அவரால் எழுதப்பட்ட எல்லாக் கவிதைகளையும் நன்கு படித்தே இம்முடிவுக்கு வந்திருக்கவேண்டும். ஆனால், அவர் வீடும் வெளியும் நூலை மட்டும் கொண்டு முடிவுகாண முயல்கிறார். அது மட்டுமல்ல நூலிலேயுள்ள தேரும் திங்களும், சிறு புல் போன்ற மணியான கவிதைகளாம் சுவை யூறும் தேன் துளிகள் அவரது விமர்சனப் பன்னாடையினூடாக ஒழுகி விடுவதைக் காண்கிறோம்.

'மகாகவி நவனோரதியவாதி' என்ற கருதுகோளை முன்வைத்த கட்டுரையாளர் அதனை ஆதாரபூர்வமாக நிறுவவேண்டிய கடப்பாடுடையவராக இருந்தும் அதற்கான ஆதாரங்களை காட்ட முயலவில்லை. மாறாக நுஃமான், சண்முகம் சிவலிங்கம் முதலியோர் "மகாகவி ஒரு மகாகவியே" என்பர் என்று கூறி நழுவி விடுகிறார். அதனோடு நுஃமானும் ச. சி. யும் இளைஞர்கள் என்று கூறி, அதற்காக அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல என மறைமுகமாகக் கண்டிக்க நாடுகிறார்.

மகாகவியின் வீடும் வெளியும் நூலில் 'சில அறிமுகக் குறிப்புக்கள்' என்ற தலைப்பில் இன்றைய அநேக கவிஞர்களைப் போல் நடப்பியல் வாழ்விலிருந்து ஒதுங்கிச் செல்வதோ அக உலகுள் அடையுண்டு கிடைப்பதோ மனோரதியக் கற்பனை உலகில் சஞ்சரிப்பதோ மகாகவியின் இயல்பு அல்ல" எனப் பதிப்பாளர் எம். ஏ. நுஃமான் குறிப்பிட்டுள்ளார். இதனை மறுக்க வேண்டும் என்ற முனைப்பிலேயே கே. எஸ். சி. "மகாகவி ஒரு மனோரதிய வாதி" என்று ஆரம்பத்திலேயே கூறி விடுகிறார்.

ஈழத்துக் கவிதை இலக்கியத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டு அதற்காக ஒரு கவிதைப் பத்திரிகையே நடாத்தியவர் எம். ஏ. நுஃமான்; ஈழத்துக் கவிஞர்களுடைய படைப்புக்களை நயப்பவர்; விமர்சிப்பவர். இந்த நயப்பின் பேறாக "மகாகவி தற்காலத் தமிழ்க் கவிதை உலகில் ஒரு முக்கிய உந்து சக்தியாகத் திகழ்ந்தார்" என்ற முடிவுக்கு வருகிறார். மகாகவி மீது அவருக்கு விருப்போ வெறுப்போ கிடையாது. "தமிழ்க் கவிதைத் துறையில் மகாகவியின் தனிச் சிறப்புகள் இன்னும் சரியான முறையில் பரவலாக இனங்காணப்படவில்லை. மகாகவியின் படைப்புக்கள் அனைத்தும் நூலுருப் பெறுவதும் வரலாற்றுரீதியில் புறநிலைப்பட்ட ஆய்வு முறைக்கு அவற்றை உட்படுத்துவதும் மகாகவியைச் சரியான முறையில் இனங்காண உதவக்கூடும்" என்ற கொள்கை உடையவர் அவர். கவித்துறையில் அவர்கொண்ட பற்றே மகாகவியின் கோடை, ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம், வீடும் வெளியும் ஆகிய நூல்களை அவர் பதிப்பிக்கக் காரணமாயமைந்தது.

"67ஆம் 68ஆம் ஆண்டளவில் (கவிதைத் துறையில்) ஒரு புதிய அலை தோன்றுகிறது. இங்கு நடுநாயகமாக எம். ஏ. நுஃமான் தோற்றமளிக்கிறார்" என விமர்சகர் ஒருவரின் பாராட்டைப் பெற்றவர் நுஃமான். இத்தகைய சிறப்பு வாய்ந்த நுஃமான் தனது கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட முயலாமல் மகாகவியின் கவிதைகளை வெளியிட்டு வருவதே நுஃமானின் சிறப்பைக் காட்டும். இதுவே மகாகவியின் உயர்வை விளக்குவதுமாகும். இந்த வரலாற்றுப் பின்னணிகளை உணராது கே. எஸ். சி, நுஃமானை மட்டந்தட்டுவதன் மூலம் மகாகவியைத் தரங்குறைந்தவராகக் காட்ட முயல்வது கடைந்தெடுத்த அறியாமையின் விளைவேயன்றி வேறல்ல.

—(அடுத்த இதழில்முடியும்.)

நோயாளி யார்?



விடுகதைகள் !

1. சீதை கேட்ட மானல்ல. புள்ளி மானும் அல்ல. நான் இருப்பது வங்காளக் கடல். நானும் உங்களில் ஒருவன். நான் யார்?

2. நான் பிறந்தது மண்ணுக்குள்ளே. நான் கறுப்பன். என்னை அறியாதார் உண்டோ. என் வருகைக்காகக் காத்திருப்பவர் பலர். என்னைக் கருவயிறன் என்றும் கூறுவர். நான் யார்?

3. எனக்குத்தேவை வளமுள்ள மண். ஈரம் கலந்த வெப்பநிலை. நெல்லைப்போல் தண்ணீர் தேவை இல்லை. நான் இருப்பது உத்தர பிரதேசம். என்னை விரும்பாதோர் இல்லை. தை மாதக் கிராக்கி. நான் யார்?

4. கூம்பு வடிவான வீடு நாலு அறையுள்ள வீடு. சிவப்பு நிறமான கண்ணுக்குத் தெரியாத வீடு. எப்பொழுதும் அதிரும் வீடு. அது என்ன?

5. என் தாயோ கடல். தந்தையோ சூரியன். என்னை விரும்பி ஏற்காத வீடில்லை. நான் யார்?

6. இரவிலே ஊர்வலம் போவான் பகலிலே உறங்கிடுவான். உடையினை ஒரு நாள் களைந்திடுவான். படையும் அவன் நிழல் கண்டே கலைந்திடும் அவன் யார்?

7. உருவில் சிறியது. உருண்டை வடிவானது. கறுப்பு நிறமானது. காரத்தில் வல்லது அது என்ன?

8. வில்லைப்போல் வளைவேன். வீடுகட்ட மரமாவேன். நான் யார்?

9. சிவப்பு மூக்கழகி. சிங்கார நடையழகி. பச்சை உடையணிந்து மழலை மொழி பேசிடுவாள். அவள் யார்?

10. மூன்று எழுத்துக்காரன். முன்னோடி வருவான். பேசவே மாட்டான். ஆனால் பெருஞ்செய்தி சொல்வான். அவன் யார்?

விடைகள்

1. அந்தமான் தீவு, 2. நிலக்கரி, 3. கரும்பு, 4. இதயம், 5. உப்பு, 6. பாம்பு, 7. கடுகு, 8. மூங்கில், 9. கிளி, 10. தந்தி.

—செல்வி. சரோஜினி பெர்னாண்டோ,
கிளிநொச்சி,

தாத்தா!

செல்வா தாத்தா ரொம்ப
தங்கமான தாத்தா
செந்தமிழை உயிராக
மதிக்கும் எங்கள் தாத்தா
நல்லொழுக்கம் எங்களுக்கு
கற்றுத் தரும் தாத்தா
நாடு போற்றும் தலைவனாய்
வாழும் எங்கள் தாத்தா
நாளை ஈழம் எமக்கெனவே
முழங்கும் எங்கள் தாத்தா
நானிலத்தில் நாம் வணங்கும்
தெய்வம் எங்கள் தாத்தா
ஈழக்காந்தியாக எம்மை
ஆள வந்த தாத்தா
இன்னும் பல்லாண்டு வாழ்க
எங்கள்
பிரியமான தாத்தா.

அ. அப்துல்லத்தீப்
திருகோணமலை

இவர் பெரியவர்!

நமக்கு வரும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதும் பழக்கம் நம்மில் பலருக்கு இல்லை. ஆனால் 78 வயது நிரம்பிய மூதறிஞர் செல்வா, இந்தத் தள்ளாத வயதிலும், அன்றாடம் தமக்கு வரும் கடிதங்களுக்கு அன்றன்றே பதில் எழுதி விடுகிறார்! வாழ்க்கையில் ஒரு ஒழுங்கு முறையை கடைப்பிடித்து வருவதில் பெரியவருக்கு நிகர் பெரியவரேதான்!

நாவடக்கம்!

நாவை அடக்குதல் நற்குணங்களில் முதன்மையானது என்று கொள். சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது மௌனம் சாதிப்பவன் ஆண்டவனின் சந்நிதியை விரைவில் எய்துகிறான்.

—கெடே.

கதம்பம்

● 1837ல் இலங்கையில் இரண்டு அச்சகங்களே இருந்தன. ஆனால் இன்றோ நவீன அச்சகங்கள் உட்பட மொத்தம் 898 அச்சகங்களிருக்கின்றன. இவற்றுள் கொழும்பில் 415. கண்டியில் 65, யாழ்ப்பாணத்தில் 62 அச்சகங்கள் இருக்கின்றன.

● உலகில் முதன் முதல் அச்சேறிய நூல் லற்றின் மொழியில் வெளியிடப்பட்டது. 1506ம் ஆண்டு நவம்பர் 7ந் திகதி இந்நூல் ரோமாபுரியில் அச்சாகியது. இங்கிலாந்தில் இரண்டும், பாஸில் ஒன்றுமாக மூன்று நூல்களே இன்று பார்க்கக் கூடியதாக இருக்கின்றன.

● புத்தகம் வெளியிடுவதில் இந்தியாவுக்கு 7வது இடம் கிடைத்திருக்கின்றது. முதலிடம் ரஷியாவுக்கும், இரண்டாவது இடம் அமெரிக்காவுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதுமாக 5 இலட்சத்து 48 ஆயிரம் புத்தகங்கள் வெளியிடப்பட்டன. இது பத்து இலட்சம் பேருக்கு 148 புத்தக வீதம் ஆகின்றது!

● சீனத்தலைவர் மாசேதுங்கின் உடல் நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாக லண்டனிலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடான 'டெய்லி டெலிகிராப்' ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. "81வயது ஆகும் சீனத் தலைவர் மாசேதுங் உடல்நிலை பாதிக்கப்பட்டு செயல்தன்மை இழந்துவிட்டார். எவ்வளவோ சிகிச்சை அளித்தும் அவர் உடல் நிலை தேறவில்லை. படுத்த படுக்கையில் இருக்கிறார்; எழுந்து நடமாடும் சக்தி இல்லை. அவர் பேசும் சக்தியையே இழந்துவிட்டார். காதுகள் செவிடாகிவிட்டன; கண்பார்வையும் மங்கிவருகிறது; தசைகள் வலுவை இழந்துவிட்டன" என்று அந்த ஏடு கூறுகிறது. மாசேதுங்கிற்கு பின்னர் சீனாவின் அரசியலில் பெருங் குழப்பம் ஏற்படக்கூடும்!

● பௌத்தபிக்குகள் உணவு உட்கொள்வதில் கட்டுப்பாடு ஒன்றை வகுத்திருக்கிறார்கள். காலையில் உணவு உண்கிறார்கள். நண்பகலில் உண்ணும் உணவு 12மணிக்கு முன்னர் உண்ணப்படவேண்டும். பகல் உணவு 12-05ற்குக் கிடைத்தாலும் உண்ணமாட்டார்கள். இதனை அவர்கள் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வருகிறார்கள். பகல் 12மணிக்குள் உணவு கிடைக்கவில்லையானால் அடுத்தநாள் காலை வரை பட்டினி கிடக்கவேண்டியதே! இரவில் அவர்கள் உண்பதில்லை.

● உலகில் நடைபெற்ற யுத்தங்களில் மிகவும் குறுகிய காலத்தில் நடைபெற்ற யுத்தமொன்று 1896ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27ந் திகதிநிகழ்ந்தது. இங்கிலாந்திற்கும் ஜான்ஸிபாருக்குமிடையிலான இந்த யுத்தம் காலை 9-02 தொடக்கம் 9-40 வரை 38 நிமிடங்களில் நடந்துமுடிந்தது. இங்கிலாந்துக் கப்பல் படை ஜான்ஸிபார் சுல்தானை அரண்மனையை விட்டு வெளியேற்றுவதற்குக் குண்டுகளை வீசி சுல்தானை அடிபணிய வைத்துவிட்டது.

● உலகில் முதற் புகைப்படம் 1822ம் ஆண்டு எடுக்கப்பட்டது. இப்படத்தை நெஸ்போ நைபே(Nicepore Niepe) என்ற பிரான்சியர் எடுத்தார். அவர் எடுத்த முதற் புகைப்படம் சாப்பாட்டிற்குத் தயாராக இருந்த மேசை ஒன்று. இதனைப் புகைப்படமாக எடுக்க அவருக்கு 8 மணித்தியாலங்கள் எடுத்தன. பாட்டிங் (Mr. Parting) என்பவர் இலங்கையில் முதற்புகைப்படத்தை 1856ல் எடுத்தார்.

● ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு முட்டையைப் போட, புதுமுட்டையாயிருந்தால் நீரின் அடியில் போய்விடும். முட்டைகளை விளக்கு, அல்லது காஸ்வெளிச்சத்தின் எதிரே தூக்கிப்பிடித்துப் பாருங்கள். நல்ல முட்டையாக இருந்தால் தெளிவாய் சுத்தமாய் நடுவில் கறுப்புப் புள்ளிகளுடன் விளங்கும். அப்படியில்லாவிட்டால் முட்டைகள் கெட்டவை என்று தெரிந்துகொள்ளுங்கள்!

● திராவிட மொழிகள், தற்போதய கணக்கின்படி, 19ஆகும். அவை பின்வருமாறு:

தமிழ், மலையாளம், கோதம், துதம், கன்னடம், குடகு, துளு, தெலுங்கு, கொலமி, நைக்கி, பர்ஜி, கட்பா, கோண்டு, கொண்ட, குயி, குவி, குருக் அன்றேல் ஒராவோன், மால்தோ, பிராஹூயி.

எழுதுங்கள்!

சுடரில் பிரசுரிப்பதற்கு தரமான சிறுகதைகள், கட்டுரைகள், துணுக்குகள், நகைச்சுவை குறிப்புக்கள் போன்றவற்றை யாரும் அனுப்பி வைக்கலாம். ஆனால் அனுப்பப்படும் விடயங்கள் சுடரில் ஆகக் கூடியது நான்கு பக்கங்களுக்கு மேற்படாதவாறு இருக்கவேண்டும் (அதாவது புல்ஸ்காப் தாளில் 4 பக்கங்களுக்கு மேற்படக்கூடாது.) இதை எழுத்தாள நண்பர்கள் கவனிக்கவேண்டுகிறோம்.

அனுப்பவேண்டிய முகவரி:-

ஆசிரியர், சுடர்,
194 ஏ. பண்டாரநாயக வீதி.
கொழும்பு-12.

பிரவுண்சன் கோப்பி

இது 100% கலப்பற்றது; சுத்தமானது
என்பதற்கு உத்தரவாதம் உண்டு!

நகர்களின்
சிறந்த
கடைகளில்
விற்பனையாகிறது

Brownson
PURE
INSTANT
coffee
NET WEIGHT
4 OZS

விற்பனை விசாரணைகளுக்கு:

பிரவுண்சன்
இண்டஸ்ரீஸ்
80-4/1 பிறைஸ் பிளேஸ்,
கொழும்பு-12.

தொலைபேசி: 27197

இப்பத்திரிகை சுதந்திரன் வெளியீட்டாளர்களால், 194 ஏ. பண்டாரநாயகா வீதி, கொழும்பு-12
சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.